Registered as a Newspaper பக்கங்கள்: 6

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மார்கழி 02 | 17 - 12 - 94 | சனிக்கிழமை | ஓசை 302

## இரத்தம் உறைதலை தடுத்து நிறுத்த புதியவகை மருந்து கண்டுபிடிப்பு

இருதயத் தாக்கம் ஏற்பட்ட பன்னிரண்டு மணி நேரத்திற்குள் நேர்கின்ற மரணங்களுள் பெரும்பாலானவை இருதயத் தமனி களில் இரத்தம் உறைவதனாலேயே நிகழ்கின்றன இருதயத்தாக்கத்தை விளைவிக்கும் இரத்த உறைதலை அரை மணி நேரத்தில் தடுத்து நிறுத்தக் கூடிய திறன் பெற்ற மருந்து ஒன்றை பாண்டிச்சேரியிலுள்ள ஆராய்ச்சி நிலையம் ஒன்று கண்டுபிடித்துள்ளது. இதுவரையிலும் பயன்பாட்டில் இருந்து வரும் மருந்துகள் சிலவகை நொதியங்களை உற்பத்தி செய்யவேண்டி இருப்பதால் இரத்தம் உறைதலைத் தடுத்து நிறுத்த நீண்ட நேரம் எடுக்கிறது. ஆனால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மருந்து இரத்த உறை கட்டிகள் மீதே நேரடியாகச் செயல் படுவதனால் உட்கொண்ட 10 நிமிட நேரத்திற்குள்ளே பயன் கிட்டுகிறது.

# வேலை நிறுத்தங்கள் அதிகரிப்பு; புதிய அரசிற்கு பெரும் நெருக்கடி

## போதிய இழுவை படகின்மை பொருள் இறக்கம் தாமதம்

(வடமராட்சி)

'ஹபரண' கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் நேற்று இடை நிறுத்தப்பட்டுள்ளது பருத்தித் துறைக்கு மாவுடன் வந்த இக்கப்பலில் இருந்து இரண்டு தினங்கள் மட்டும் பொருள்கள் இறக்கப்பட்டன.

போதிய இழுவைப்படகுகள் இல்லாததினால் 'ஹபரண' 'கோமாரி' கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்குவதில் ஏற்படும் கஷ்ட நிலையினால் 'ஹபரண' கப்பலை காங்கேசன் துறையில் நிறுத்தி விட்டு 'கோமாரி' கப்பலில் மட்டும் பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

கோமாரி கப்பலில் பொருள்கள் இறக்கி முடிக்கப்பட்ட பின்னரே ஹபரண கப்பலில் இருந்து மா இறக்கப்படும் குமண கப்பலும் காங்கேசன் துறையில் தரித்து நிற்கிறது.

மற்றும் கொழும்பு துறை முகத்தில் 'வாதுவ' கப்பல் பொருள்களை ஏற்றுவதற்காக தரித்து நிற்கிறது (யோ)

## மாணவர் உணவு முத்திரை யாழ். எடுத்து வரப்பட்டது

யாழ்.மாவட்டபாடசாலை மாணவர்களது மதிய உணவு முத்திரைகள் 'ஹபரண' கப்பலில் வந்துள்ளது. 1994ஆம் ஆண்டுக்கான மிகுதி மதிய உணவு முத்திரைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

நாற்பத்தெட்டரை கோடி பெறுமதி வாய்ந்த ஒரு இலட்சத்து பதினையாயிரம் மதிய உணவு முத்திரைகள் வந்துள்ளன.

மேலும் காணி பதிவகத்திற்கான, பிறப்புச் சான்றிதழ் புத்தகங்களும்செயலகத்திற்கு வந்துள்ளன. (யோ)

## ஜனவரி முதல் சீனி விலை மேலும் 3 ரூபா குறையும்

(வடமராட்சி)

சீனியின் விலையை மேலும் மூன்று ரூபாவால் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக உணவு திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வருடம் ஜனவரி முதல் விலைக் குறைப்பு நடவடிக்கை வருமென்றும் ஒரு கிலோ சீனிக்கு மூன்று ரூபா விலை குறைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (யோ)

## கூட்டுறவுச் சங்கங்களும் சுகாதாரம் பேணவேண்டும்

தமிழீழ மருத்துவப் பிரிவு

கூட்டுறவுச் சங்கங்களும் உணவுச் சுகாதாரத்தைப் பேணவேண்டும் என விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து மருத்துவப் பிரிவு விடுத்த செய்திக்குறிப்பில்;

யாழ், நகரில் இயங்கிவரும் தீவகப் ப. நோ கூ, சங்கக் கிளையொன்றிலிருந்து தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினரால் அண்மையில் பறிமுதல் செய்யப்பட்ட காலாவதியான ரின்பால் சம்பந்தமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. சங்க நிர்வாகிகள் காலாவதியான

(6ஆம் பக்கம் பார்க்க)

## தொழில்பிணக்கினை தடுக்க விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

விசேட பொலிஸ் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் தொழில் பிணக்குகளின் காரணமாக ஏற்படும் வன்செயல்களைத் தடுப்பதே என்று ஜனாதிபதி செயலகம் நேற்றுமாலை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கை மேலும்

[6ஆம் பக்கம் பார்க்க]

## சமாளிக்க முடியாது தடுமாற்றம்

(கொழும்பு)

தென்னிலங்கையில் அரச - தனியார் நிறுவனங்களில் அதிகரித்து வரும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்குப் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆட்சிப்பொறுப்பேற்ற இக்குறுகிய காலப்பகுதிகளில், அறுபதிற்கு மேற்பட்ட போராட்டங்கள் நடைபெற்றுள்ளதாகவும், அதேவேளை பல தொழிற்சங்கங்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது விட்டால் போராட்டத்தில் இறங்கப்போவதாகவும் எச்சரித்துள்ளன. இதேசமயம், அரசாங்கம், இவ் வேலை நிறுத்தங்கள் தொடர்பாக தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ள முடியாது குழம்பிப்போயுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்னிலங்கையில், அண்மையில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் திடீரென அதிகரித்துள்ளன. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்று மூன்று மாத காலத்திற்குள் உருவாகியுள்ள இந்நெருக்கடியானது அரசிற்குப் பெரும் தலைவலியைக் கொடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியினர் எதிர்க் கட்சியாக இருந்த சமயம், தொழிலாளர்களின் வேலை நிறுத்த ... கொண்டு தொழிலாளர் போராட்டங்களை நடத்துகின்ற போது அரசாங்கம் அதைத் தீர்க்க முடியாது தத்தளிப்பதாக வெளிநாட்டுச் செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இதேசமயம், அரசாங்கம் உதவி வைத்திய அதிகாரிகள். வைத்திய அதிகாரிகள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தை கையாண்ட விதம் அரசின் அனுபவமின்மையைக்

[6ஆம் பக்கம் பார்க்க]

## வைத்திய அதிகாரிகள் வேலை நிறுத்தம் முடிவு

அரசாங்க வைத்திய அதி... சுகாதார அமைச்சு ஏற்றுக்...

## மதக்கலவரங்களை தூண்ட

# அரசிற்கெதிரான சக்திகள் சதி

பாப்பரசரின் வருகையை அடுத்து அரசுக்கு எதிரான சக்திகள் மதக்கலவரங்களைத் தூண்டி விடலாம் என கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள பிரபல பத்திரிகையாளர் அமால் ஜெயசிங்கா பாப்பாண்டவரின் வருகையை பௌத்த பீடங்கள் பகிஷ்கரிப்பதும் இது தொடர்பாக அறிக்கையை அவர்கள் வெளியீடுவதும் எதிர்காலத்தில் ஒரு மதக் கலவரத்திற்கு வழிவகுக்கும் என தெரிவித்துள்ளார்.

முன்னர் இனவாத நோக்கில் இவர்கள் செயற்பட்டமையே இனக்கலவரங்களுக்கு வழிவகுத்ததாகவும் இதனை ஒத்ததே இன்று மகா சங்கத்தினர் விடுத்துள்ள அறிக்கை மற்றும் பகிஷ்கரிப்பு குறித்த அறிவிப்புக்களும் என்றும் இதனால் நாடு மீண்டும் ஓர் மோசமான நிலையை எதிர் நோக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களை மதத்தை நோக்கி ஏவி விடுவதற்கு ஒத்த செயலாக இதனைக் கருத முடியும் என்றும் இதனால் நாட்டிற்கு ஏற்படவுள்ள பாதிப்பை இலகுவில் கணிப்பீடு செய்ய முடியாது எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

# பௌத்த அமைப்புகளின் எதிர்ப்பைமீறி

# பாப்பரசரை சந்திரிகா சந்திப்பார்

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

பாப்பாண்டவரின் வருகையைப் பௌத்த அமைப்புக்கள் பகிஷ்கரித்தபோதும் இவரின் வருகை தொடர்பாக தமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது என சிறிலங்கா ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனவே எந்த இடையூறு ஏற்பட்டபோதும் பாப்பரசரின் வருகை தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பாப்பரசரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தரிசிப்பார் எனவும் ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மகா சங்கத்தினர் தெரிவித்துள்ள எதிர்க் கருத்துக்களைப் பாப்பாண்டவரின் வருகையுடன் கலக்காது அதைத் தனியான ஓர் அலகாக வைத்தே நோக்கப்படவேண்டும் என அச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளது.

# எப்போது சமாதானப் பேச்சு என்று ஆவலாக உள்ளேன்

## காணாமற்போன கடற்படை சிப்பாய் மனைவி கடிதம்

(கொழும்பு)

மன்னார் கடலில் சாகரவர்த்தனா கடற்படைக் கப்பல் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட போது அதில் எனது கணவரும் கடமையிலிருந்தார் இன்றுவரை அவரின் நிலை தெரியவில்லை காணாமற் போனார் என்பது மட்டுமே அறிந்துள்ளேன். இவ்வாறு பாத்திமா பஸ்ரா அலி என்ற மத்திய வீதி கொழும்பு என்ற முகவரியுடைய பெண் கொழும்பு தினசரி ஒன்றிற்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் எனது கணவர் புலிகளினால் சிறைவைக்கப்பட்டிருக்கலாம் என நான் நம்புகிறேன். இது பற்றி அறிய கடற்படை தலைமையகத்திற்கு பல தடவை சென்றும் சரியான

[6ஆம் பக்கம் பார்க்க]

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் உள்ள சிறிலங்காப் படையினரின் நிலைகளில் இருந்து நேற்று முன்தினம் இரவு பலத்த எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நள்ளிரவில் இருந்து பல மணி நேரமாக விட்டுவிட்டு நடாத்தப்பட்ட இத் தாக்குதலின்போது ஏவப்பட்ட எறிகணைகள் யாழ். கரையோரப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. [22]

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

பொதுஜன ஐககிய முன்னணியினர் எதிர்க் கட்சியாக இருந்த சமயம், தொழிலாளர்களின் வேலை நிறுத்த உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்துள்ளனர். ஆனால், தற்பொழுது கிடைக்கப்பெற்ற உரிமைகளைக்

# வேலை நிறுத்தம் முடிவு

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வேலை நிறுத்தம் நேற்று நண்பகலுடன் முடிவுக்கு வந்துள்ளது. வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்வைத்த கோரிக்கைகளை சுகாதார அமைச்சு ஏற்றுக் கொள்ள முன்வந்ததைத் தொடர்ந்து இவ் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அக்காவுடனான தகராறு தங்கையின் கொலையில் முடிந்தது

## சுவிஸில் நடந்த கோரச் சம்பவம்

(வடமராட்சி)

அக்காவுக்கும் தங்கைக்கும் இடையில் எழுந்த குடும்பத் தகராறினால் அக்கா தங்கையைக் கத்தியால் குத்திக் கொலை செய்தார்.

சுவிஸில் நடைபெற்ற இக் கொடூரச் சம்பவத்திற்கு பலியானவர் பொலிகண்டியைச் சேர்ந்த கந்தையா சந்திரகலா [வயது 22] எனத்தெரிய வந்துள்ளது.

சுவிஸில் திருமணம் செய்த தனது அக்காவுடன் பலியான சகோதரி தங்கியிருந்தார் எனவும் இதன் போது இவர்களுக்கிடையில் கருத்து முரண்பாடுகள் எழுந்ததாகவும் சம்பவதினம் கோபமுற்ற அக்கா, தங்கையை கத்தியால் குத்திக் கொலை செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது,

சம்பவத்தை அறிந்து உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த சுவிஸ் பொலிசார் விசா

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் காவலிலுள்ள புலிகளை யாழ். அனுப்புவது குறித்து ஆராய்வு

## இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையம் தெரிவிப்பு

(சென்னை)

மனித உரிமைகளைப் பொறுத்தவரை தமிழ் நாட்டில் நிலைமைகள் நன்றாக இல்லை என தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா கூறியுள்ளார். சென்னையில் நேற்று செய்தியாளரிடம் பேசிய அவர், இம் மாநிலத்தில் மனித உரிமைகள் தொடர்பாக பல்வேறு தனிப்பட்டவர்களிடமிருந்தும் அமைப்புக்களிடமிருந்தும் பெறப்பட்டுள்ள மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு கமிசனின் பரிந்துரையோடு மாநில அரசிற்கு அனுப்பப்படும் என்றார்.

தமிழகத்தில் பொலிஸ் காவ

(6ஆம் பக்கம் பார்க்க)

# தடாசட்டம் துஷ்பிரயோகம் குறித்து இந்திய மனித உரிமை குழுவிடம் புகார்

[சென்னை]

தடா சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்று தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் ப. நெடுமாறன் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழகத்திற்கு வருகை தந்துள்ள மனித உரிமை குழு முன்னிலையில் சாட்சியமளித்த ப. நெடுமாறன் மேலும் கூறுகையில், தடா சட்டத்தின் கீழ் 137 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 120 பேர் சிறைபில் வைக்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### மலிவு விலையில்

பாடசாலை உபகரணங்கள் கொப்பிவகைகள் 'கப்' மெழுகுதிரி ,பூச்சிகொல்லி (''இன்செக்ரிடஸ்ட்'') மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம் வியாபாரிகளுக்குதகுந்த கழிவு வழங்கப்படும். கண்ணன் - கீதை, மக்கள் வங்கி முன்பாக ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (10354)

### ஆண்டு 4

ஆண்டு 4 மாணவருக்கு (புலமைப் பரிசில் 1996) மாதிரிப் பரீட்சை வினாத்தாள் 18. 12. 94 ஞாயிறு வெளியிடப்படும். மாதிரி வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (10413)

### A/L இரசாயனம்

Day Class வகுப்பு ஆரம்பம் 19.12.94 திங்கள் 8. 15 காலை.ஆசிரியர்:சத்தீஸ் 108 பிறவுண் வீதி,யாழ்ப்பாணம். [10409]

### இடமாற்றப்பட்டுள்ளது

புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தியில் சேவையாற்றிய வரதன் வைத்தியசாலை யா/03/726 புத்தூர் மேற்கு சோமாஸ்கந்த கல்லூரிக்கருகாமையில் இடமாற்றப்பட்டு சேவைகள் வழமை போல் நடைபெற்று வருகின்றன. [10412]

### தவறிவிட்டது

தியாகராசா தியாகேஸ்வரி என்பவருடைய அடையாள அட்டையும் (587632527 V] பணம், நகை என்பவற்றைக் கொண்ட பயணப் பொதியும் 13-12-94 அன்று கிளாலிக் கரையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிறாம்பியடி -3 யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (10418)

### அலுவலக மேசைத் தட்டுகள்

கல்லூரி, அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு ஏற்ற, எவர் சில்வரால்

# பயிலுனர் ஆசிரிய பரீட்சை எதிர்வரும் 28 இல்

இவ்வாண்டுக்குரிய தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் தமிழ் மொழி மூலம் கற்பிப்பதற்கான தகுதியுடையவர்களை பயிலுனர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி அன்று யாழ்ப்பாணத்தில் ஐம்பது பரீட்சை நிலையங்களில் இடம்பெறும். இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்குஅனுப்பி வைக்கப்படும் எனப் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை காலை 9. 30 மணிக்கு யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளது.

## முக்கிய அறிவித்தல்கள்

(அ) எமது சமாசத்தினால் கடந்த 16-6-93 ல் நடாத்தப்பட்ட 'அதிர்ஷ்டலாபசீட்டிழுப்பு' தொடர்பாக எம்மால் வெளியிடப்பட்ட 'கணக்கறிக்கை' பத்திரத்தில் சில தவறுகள் ஏற்பட்டுள்ளது குறித்து வருந்துகின்றோம். குறிப்பாக எமது அங்கத்தவ கிளை (வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம்) 7 இல் இருந்து ரீக்கற் விற்பனை பணம் எமக்கு பூரணமாய் கிடைத்துள்ளதென்றும், அக்கிளையில் இருந்து வரவேண்டிய ரிக்கற் பணம் பாக்கி எதுவும் இல்லை என்றும் அறியத் தருவதோடு சம்பந்தப்பட்ட கணக்கறிக்கை முழுமையான திருத்தத்துடன் சமாச 'மகாநாடு' ஞாபகார்த்த 'மலரில்' இணைப்பாக வெளிவரவுள்ளது என்பதையும் யாழ் கிளை உட்பட அனைத்து கிளைகளுக்கும் உறுப்பினர்களுக்கும் அறியத் தருகின்றோம்,

(ஆ) எமது தொழில் நிலையங்கள் மாலை 7 மணிக்கு மூடப்படல் வேண்டும் என்ற விதி உறுப்பினர்களின் நன்மை கருதி எம்மால் தளர்த்தப்பட்டுள்ளது. எனினும் 1-1-95 தொடக்கம் தொழிலாளர்களுக்கு இரவு 7 மணிக்கு பின்னர் மேலதிக கொடுப்பனவு வழங்குமாறும் நிலையங்களில் தொழிலாளர் விபரம் அடங்கிய பதிவேடு வைத்திருக்குமாறும் அன்புடன் வேண்டுகின்றோம்.

(இ) எமது சங்கங்களின் சமாச 'மகாநாடு' அன்பான உறுப்பினர்களின் விருப்பத்திற்கிணங்க தைமாத (1995) இறுதிக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

(ஈ) இதுவரை சமாச ''உறுப்பினர் சான்றுப் பத்திரம்'' பெற்று நிரப்பி ஒப்படைக்காதவர்கள் 1-1-95ற்கு முன்னர் பத்திரத்தைப் பெற்று நிரப்பி ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம்.

நன்றி!

கௌரவ செயலாளர்

வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

(10419)

## கடன்கொடுத்தோருக்கான பணக்கொடுப்பனவு

விளக்குவைத்தகுளம் பாண்டியன் கொள்வனவு மையத்தினருக்கு பொருள்கள் கடனுக்கு விற்பனை செய்தவர்களுக்கான பணக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 20.12.94 தொடக்கம் 24.12.94 வரை வழங்கப்படவுள்ளது.

# நிவாரணப் பொருட்களில் மாவு இல்லை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்கான அக்ரோபர் மாத முதல் இரண்டு வார நிவாரணப் பொருட்களிலும் மாவு இடம் பெறவில்லை.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலின்படி அரிசி, சீனி, மைசூர் பருப்பு, பூடு, பெருஞ்சீரகம், தேயிலை, கடலை, ரவ்வை, தீப்பெட்டி, லக்ஸ் பிறே ஆகிய பொருட்கள் வழங்கப்படும்.

20A இலக்க புள்ளிக்கு மேற்கொள்ளப்படும் இப் பொருட்களின் விநியோகத்தை இம் மாதம் 24-ம் திகதிக்கு முன்னர் சங்கங்கள் முடித்துக் கொள்ள வேண்டும் என்றும் அப் பட்டியலில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது, (22)

# பத்து இலட்சத்திலும் கூடிய பனை விதைகள் நடுகை

தமிழீழத்திலே 1994 .ம் ஆண்டில் இன்று வரை பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத் திட்டத்தில் தமிழீழத்தின் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பாடசாலைகள், பனை அபிவிருத்திச் சபையினர், பொது நிறுவனங்கள், பொதுமக்கள் மிகவும் உற்சாகத்துடன் இணைந்து பங்களிப்புச் செய்தனர் என்பதும், இத்திட்டம் வரும் ஆண்டுகளில் இன்னும் பாரிய அளவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது

# நில அளவைப் பயிற்சி வழங்க முடிவு

யாழ். பல்கலைக் கழகத்தில் புற நிலைப் படிப்பலகி முன்னோடி நில அளவைப் பயிற்சியினைப் பூரணப்படுத்தியோருக்கான உயர்மட்ட நில அளவைப் பயிற்சியினை தமிழீழ நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழகம் வழங்கவுள்ளது. இப் பயிற்சியில் பங்குபெற விரும்புவோர் எதிர்வரும் 19-ம் திகதி திங்கட்கிழமை யாழ். நகர், வண்ணார் பண்ணை மேற்கு, அக்பர் வீதியில் அமைந்துள்ள புங்குடுதீவு ஸ்ரீ. கணேசமகா வித்தியாலயத்தில் காலை 11.00 மணிக்கு நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

புதிதாக முன்னோடி நில அளவைப் பயிற்சிபெற விண்ணப்பித்தோருக்கான நேர்காணல் இதே தினம் காலை 9.00 மணிக்கு மேற் குறிப்பிட்ட வித்தியாசாலையில் நடைபெறும். இம் முன்னோடி நில அளவைப் பயிற்சியில் இணைய இதுவரை விண்ணப்பிக்காத, 29 வயதுக்கு குறைந்த, க.பொ.த (சா/த) அல்லது தமிழீழ கல்விக் கழகத்தினரின் முன்னோடிப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய தராதரச் சான்றிதழுடன் இதே தினம் நேரில் சமுகமளிக்குமாறு தமிழீழ நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழக நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

### யாழ்ப்பாண மாநகரசபை பொது அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக் குட்பட்ட இந்து, கிறிஸ்தவ இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களுக்குகடந்தகால வன்செயல்களினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றிய தகவல்கள் யாழ்ப்பாண மாநகரசபையால் திரட்டப்படுகிறது.

பாதிப்புற்ற வணக்கத் தலங்களின் தர்மகர்த்தாக்கள், பங்குத் தந்தைகள். நிர்வாகிகள் எதிர் வரும் 21-12-94 ஆம் திகதிக்கு முன்னர் மாநகரசபையின் மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொண்டு இழப்பு தொடர்பான தகவல்களை வழங்கியுதவுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,

பனம் பொருள் அபிவிருத்தி சபை தலைவர்

# பதவி விலக்கப்பட்டவருக்கு மீண்டும் பதவியா?

## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் 13 வருடங்களாக பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவராக இருந்து தற்போது ஊழல் மற்றும் மோசடி குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகி பதவி விலக்கப்பட்டுள்ளவர் மீண்டும் தமிழ் அரசியல் பிரமுகர்களின் உதவியோடு சபைத் தலைவர் பதவியை பெற முயற்சிப்பதாக இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அவர் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மீதான குற்றச் சாட்டுக்களையும் வாசுதேவ நாணயக்கார சுட்டிக் காட்டியுள்ளார்.

அவற்றில்

- மத்திய வங்கிக்கு செலுத்தப்படுவதற்காக ஊழியர்களிடமிருந்து பெறப்பட்ட ஏழு இலட்சம் ரூபா சேமலாப நிதி வங்கிக்குச் செலுத்தப்படவில்லை. இது தொடர்பாக அம்பாந்தோட்டை தொழிலாளர் விசாரணை மன்றத்திலும் வழக்கொன்று தாக்கலாகியுள்ளது. இப்பிரச்சினை தொடர்பாக சபையின் யாழ் அலுவலகத்தை சேர்ந்த உயரதிகாரிகள் சிலரும் பதவி விலகியுள்ளனர்.
- 1992-1993 ஆண்டுகளில் சபையின் சில முக்கியமான ஆவணங்களும் காணாமற் போயுள்ளன.
- 1991-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலுள்ள சபையின் அலுவலர்களுக்கு என கொழும்பு வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட 3 இலட்சம் ரூபாவில் இரண்டு இலட்சம் ரூபாவே யாழ்ப்பாணத்துக்கு அரசாங்க அதிபரூடாக அனுப்பப்பட்டது. மிகுதிப் பணம் அனுப்பப்படவில்லை.
- கணக்காய்வு திணைக்களத்தினால் விசாரணைகளோ, கணக்காய்வு அறிக்கைகளோ சபையின் கருமங்களில் நடைபெற வில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஜனாதிபதிக்கான கடிதத்தில் இணைத்துள்ள அவர் -இதுதொடர்பாக அவருக்கு மீண்டும் பதவி வழங்கப்பட்டால் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப் போவதாகவும் வாசுதேவ நாணயக்கார தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### அடிதடி நிகழ்ந்தது

இரு பகுதியினரிடையே நிலவிய காணி தொடர்பான மனக்கசப்பு வாய்த்தர்க்கத்தையும் அதைத்தொடர்ந்து அடிதடியையும்ஏற்படுத்தியது இம்மோதலின் போது கொட்டன் பொல்லினால் தாக்கப்பட்ட ஒருவர் படுகாயமடைந்தார்,

சாவகச்சேரி நீதிமன்றில் காவல் துறையினர் இது தொடர்பான வழக்கை முற்படுத்திய போது பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடாக தலா 500 ரூபாவும், குற்றப் பணமாக தலா 1000 ரூபாவும் கட்டும்படி பேரனும் மகனுமான இருவருக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

## நினைவு கூருகின்றோம்...

**17.12.1994**

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த-

**சுரேஸ்** (க. தயானந்தன்-கோட்டைக்கல்லாறு -மட்டு)

1988ஆம் ஆண்டு நெடுந்தீவுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். ரவி** (இராமச்சந்திரன் ரவிச்சந்திரன்- ஒடக்கரை, பருத்தித்துறை - யாழ்)

1992ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச் சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் மணவாளன்- சந்திரன்** (மார்க்கண்டு

### தட்டுகள்

கல்லூரி, அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு ஏற்ற, எவர் சில்வரால் அமைக்கப்பெற்ற வெவ்வேறாக இரு கிண்ணங்கள் கொண்ட குண்டூசி, கிளிப், பேனை, பென்சில் வைக்கும் கண்கவர் அலுவலக மேசைத் தட்டுகள் குறைந்த எண்ணிக்கையில் விற்பனைக்குண்டு.
''மில்க்வைற்'' (சி-10925)

### மொத்த விற்பனை

கிறிஸ்மஸ்சோடனை, அழகு சாதனப் பொருள்கள், றேடியோ. கைக்கடிகாரம், எவர் சில்வர் பிளாஸ்ரிக்பொருள்கள் பாடசாலை - தையல் உபகரணங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பொலித்தீன் வகைகளை மொத்த விலையில் பெற்றுக் கொள்ளுங்கள் ஜெயா அழகுமாடம். 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-10902)

### தேவை

26'' அல்லது அதற்கு மேற்பட்ட அமைப்பிலுள்ள சொனி / நாஷனல் கலர் ரீ. வீ. தேவை. கீழ்கண்ட முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். உரிமையாளர். லிபேட்டி சினிமா அச்சுவேலி, (10421)

### விசேட கூட்டம்

யாழ். மாவட்ட நல்லூர் திரிசாரணர் குழுவுக்கான விசேடகூட்டமொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 5. மணிக்கு யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் இடம்பெறும். இக்கூட்டத்திற்கு சகல நல்லூர் திரிசாரணர்களையும் கலந்து கொள்ளுமாறு அதன் செயலாளர் கேட்டுக் கொள்கிறார்.

---

விளக்குவைத்தகுளம் பாண்டியன் கொள்வனவு மையத்தினருக்கு பொருள்கள் கடனுக்கு விற்பனை செய்தவர்களுக்கான பணக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 20.12.94 தொடக்கம் 24.12.94 வரை வழங்கப்படவுள்ளது.

கடன் கொடுத்தவர்கள் அனைவரும் விளக்க ஆவணங்களுடன் குறிப்பிடப்பட்ட நாள்களில் காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கருகில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு வருகை தந்து பணத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பாண்டியன் பல்பொருள் வாணிபம்
நடுவப்பணியகம்

(சி-10919)

---

ஒரு நாள் ஒத்திவைப்பு

# போஸ்கோ

ஆதரவில்

யாழ். மிட்-ரவுண் றோற்ரறக்ற் கழகம்
மின்னொளியில் நடாத்தும்

# கராத்தே
# இறுதிப் போட்டிகள்

காணத் தவறாதீர்கள்

★ இன்று ஆரம்பிக்கவிருந்த போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒரு நாள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இடம்: யாழ். பல்கலைக்கழக முன்மைதானம்
காலம்: மார்கழி 18-ம், 19 ம் திகதிகளில் (ஞாயிறு, திங்கள்) மாலை 6-00 மணி - 11-00 மணி வரை.

அன்பளிப்பு: 20/-, 50/-, 100/-

சிறுவர்களுக்கு மட்டும் 10/-

ஃ நேற்றையதினம் பிரசுரமான விளம்பரச் சிக்கல்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

தலைவர்
யா.மி.றோ.க.

(10426)

---

...க்கு குறைந்த, க.பொ.த (சா/த) அல்லது தமிழீழ கல்விக் கழகத்தினரின் முன்னோடிப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விசேட சித்தி அல்லது க.பொ.த (உ/த) கணிதம், பௌதிகம் ஆகியவற்றில் சித்தியுடைய ஆண், பெண் இருபாலாரும் கல்வித்

---

...பான தகவல்களை வழங்கியுதவுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
16-12-1994.

(சி-10928)

---

கணக்கு எழுதுனர்/எழுதுனர்
பயிற்சியாளர்க்கான

# பதவி வெற்றிடங்கள்

கல்வித்தகைமை:-

கணிதம், தமிழ் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கூடிய க/பொ/த [சா/த] சித்தி

-வர்த்தகப் பிரிவு பாடங்களுள்ளிட்ட க/பொ/த [உயர்தரம்] சித்தி.

-கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

-எழுதுனர் பயிற்சியாளர் மட்டில் சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சியும், மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

-கூட்டுறவுத் துறைசார் நிறுவனங்களில் பணி புரிபவர்களிடமிருந்தே க/கு எழுதுனர் பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

-விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கூடாக முறையாக முன்னளிக்கப்பட வேண்டும்.

வயது - க/கு எழுதுனர் - 45 வருடங்களுக்குள்.
- எழுதுனர் பயிற்சியாளர் - 25 வருடங்களுக்குள்

வேதனம்-க/கு எழுதுனர் - தற்போதைய சம்பள அளவையும் கவனத்தில் கொண்டு, பொருத்தமான சம்பளம் வரையறை செய்யப்படும்.

எழுதுனர் பயிற்சியாளர்- தகைமைக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி :- 30/12/94.**

விண்ணப்பிக்கும் முகவரி:-

பொதுமுகாமையாளர்
வடமாகாண ப.நெ.வ.அ கூ.ச.சமாசம்
499 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

(சி-10927)

---

கரை, பருத்தித்துறை - யாழ்)

1992ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச் சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் மணவாளன்- சந்திரன்** (மார்க்கண்டு சிறிஸ்கந்தராசா - தங்கபுரம் - வவுனியா)

1993ஆம் ஆண்டு பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் ஜெகதீசன்- டானியல்** (மகேந்திரராசா அருள்மாறன் - பாரதிவீதி, கம்பர்மலை, வல்வெட்டித்துறை)

**கப்டன் கந்தன்** (இராசையா சசிக்குமார் - மணற்காடு - குடத்தனை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10924)

---

விண்ணக வாழ்வின் முதல் வருட

# நிறைவு நினைவஞ்சலி

## நீக்கிலாஸ்
## அந்தோனிப்பர்ணாந்து

**மண்ணில்: 11-07-1933 விண்ணில்: 17-12-1993**

''இறந்தோருக்காக செபிப்பது பரிசுத்தமும் பிரயோசனமுமுள்ள எண்ணமுமாயிருக்கிறது''

அன்பினாலும் உதவிசெய்யும் மனப்போக்கினாலும் கலகலப்புடன் கூடிய நற்புறவுப் பண்புகளாலும் பல்லோரின் இதயங்களை கொள்ளை கொண்டவரே அனுதினம் உங்களை நினைத்திடுவோரின் வேண்டுதல் கேட்டு இறைமகன் தங்களுக்கு இன்ப சாந்தி அளித்திடுவாராக.

இவரது பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், அக்கா, தம்பி, மச்சான், மச்சாள்மார்,
மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்

இல, 11 அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

(10422)

# தொழிலாளர் கோரிக்கை நிறைவேற்ற ஒருவருடகால அவகாசம் தேவை

## -ஜனாதிபதி திருமதி சந்திரிகா

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததை தொடர்ந்து 38 க்கும் மேற்பட்ட தொழிற்சங்க பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. சடந்த அரசாங்க காலத்திலிருந்து நீடித்த 52 க்கும் மேற்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு நாம் முகங்கொடுக்க நேரிட்டது. கடந்த அரசு காலத்தில் ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள், இந்த தொழிற் பிணக்குகள் சம்பந்தப்பட்டவையாகும். அவற்றில் 38 க்கும் மேற்பட்ட தொழிற் சங்க பிணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. மற்றும் ஆறு பிணக்குகள் மத்திய குழுவிடம் விடப்பட்டுள்ளன. இவை தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தப்படும். இவ்வாறு ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா கடந்த திங்களன்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் கடந்த அரசின் பொருளாதாரக் கொள்கைகளின், காரணமாக ஐ. தே க. தற்போதைய தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு பின்னணியில் இருக்கிறது. அரசாங்கத்துக்கு பிரச்சினைகளை ஏற்படுத்த முற்படுகிறது எனவும் தெரிவித்தார். அத்துடன், ஐ. தே. க வின் அரசியல்வாதிகள் தொழிலாளர்களை ஏமாற்றி தமது அரசியலுக்கு பகடைக்காய்களாக்கி வருவதாகவும் குறிப்பிட்டார், கடந்த காலங்களில் தொழிற் சங்க நடவடிக்கைகளை முறியடிக்க தொழிற்சங்க முக்கியத்தர்கள் கடத்திச் செல்லப்பட்டனர் அத்தகைய வழிமுறைகளை தமது அரசாங்கம் கடைப்பிடிக்க மாட்டாது எனவும் குறிப்பிட்டார்.

மேலும், கடந்த அரசு தொழிலாளர்கள் மீது ஏற்படுத்தியிருந்தசுமைகளின் காரணமாகவே அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தி தொழிலாளர் வர்க்கம் எம்மிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்துள்ளது அது ஒரு பாரிய பொறுப்பாகும். இந்தப் பாரிய பொறுப்பை செம்மையாக நிறைவேற்ற ஒரு வருட காலமாவது செல்லும் ஆகையால் எம்மை ஆட்சியில் அமர்த்திய தொழிலாள வர்க்கம் இதற்கு ஒரு வருடம் கால அவகாசம் தரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# வேலை நிறுத்தத்தின் பின்னணியில் நிர்வாக முகாமை - படை அதிகாரிகள்

## உடனடி விசாரணைக்கு உத்தரவு

தெற்கில் அரச, தனியார் துறை வேலை நிறுத்தங்களில் இவற்றின் நிர்வாக முகாமையாளர்கள் படை அதிகாரிகள் தொடர்பு குறித்த பின்னணி பற்றி விசாரணைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

தேவையேற்படின் சம்பந்தப்பட்டவர்கள் கைதாவர் என அரச தரப்பில் கூறப்படுகின்றது. இத்தகைய குழப்ப நடவடிக்கையில் எதிர்க்கட்சி எம். பிகளின் கையும் இருப்பதாக குறறஞ்சாட்டப்படுகின்றது.

தொழிற் சங்க போராட்டம் என்ற போர்வையில் அரச எதிர்ப்பு சதியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா எச்சரித்திருந்தமை தெரிந்ததே.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் அச்சமும் பீதியும் உருவாகும் வகையில் இப்போராட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டியிருந்தார்.

# கொழும்பு இந்துக்கல்லூரி மீது இசிப்பத்தான மாணவர் தாக்குதல்

## வாகனத்தில் வந்திறங்கி ரகளை

(கொழும்பு)

கொழும்பு இசிப்பத்தான தேசியப் பாடசாலையை சேர்ந்த மாணவர் கோஷ்டியொன்று பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்குள் புகுந்து மாணவர்களை தாக்கியதுடன் கட்டட கண்ணாடி ஜன்னல்களையும் அடித்து நொருக்கியது.

இச்சம்பவம் கடந்த திங்களன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெற்றது. இச் சம்பவம் நடந்த போது க. பொ. த (சா/த) பரீட்சை அங்கு நடந்து கொண்டிருந்தது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, இசிப்பத்தான மாணவர்கள் கற்கள், தடிகள், ஹொக்கித் தடிகள் ஆகியவற்றுடன் வானொன்றில் இந்துக்கல்லூரிக்கு முன்னால் வந்து இறங்கினர்.

இதை தொடர்ந்து இந்துக் கல்லூரியை நோக்கி பெருமளவு கற்கள் வீசப்பட்டன. இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதான ''கேற்'' தூக்கி வீசப்பட்டது. அதன் வழியாக புகுந்த இசிப்பத்தான மாணவர்கள் சாரிசாரியாக உள்ளே நுழைந்து இந்துக் கல்லூரியின் புதிய கட்டடக் கண்ணாடி ஜன்னல்களை அடித்து நொருக்கினர்.

க. பொ. த (சா/த) பரீட்சையின் சித்திரப் பாடத்தின் முதலாவது பகுதியை முடித்துவிட்டு ஓய்வாக இருந்த மாணவர்கள் இத்தாக்குதலை அடுத்து நாலா புறமும் சிதறியோடினர். இவர்கள் மீதும் பெருவாரியாக செங்கற்கள் வீசப்பட்டன. இதே வேளை சித்திர பாடத்தின் இரண்டாம்பகுதிக்கு தோற்ற 90 சதவீத மாணவர்கள் சமுகமளிக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. இந்த மாணவர்களுக்கு மீண்டும் சித்திரப் பாடம் நடத்தப்படுமா என பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்லவிடம் கேட்ட போது இது தொடர்பாக இந்துக்கல்லூரி அதிபர் தனக்கு எதுவித முறைப்பாட்டையும் தரவில்லை என தெரிவித்ததாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# பல்கலை அனுமதியை உயர்த்தி விரக்தி நிலை அகற்றலாம்

## மானிய ஆணைக்குழுவின் உபதலைவர்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு சேர்க்கப்படும் மாணவர்களின் தொகையினை அதிகரிப்பதன் மூலம் உயர்கல்வி பெறத் தகைமையிருந்தும் பல்கலைக்கழக அனுமதி பெறத் தவறும் மாணவர்களின் விரக்தி நிலையை போக்கமுடியும். இவ்வாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உபதலைவர் பேராசிரியர் எஸ். பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அனைத்து இளைஞர்களுக்கும் உயர்கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் [illegible] மாகாண மட்டங்களில் [illegible] ஒரு இடங்களில் இ[illegible]க்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால், இவற்றுக்கான சகல வசதிகளும் வழங்கப்படவில்லை. கல்லூரிகளை தொடங்க வேண்டும் என்பதற்காக மாணவர்களுக்கான அடிப்படை வசதிகளை கூட தராமல் இக்கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கூடிய கவனத்திற் கொள்ளும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாதாள உலக அஜீத் தெகிவளையில் கைது

(கொழும்பு)

பாதாள உலகின் முக்கிய பிரமுகர்களில் ஒருவர் எனக் கருதப்படும் அஜீத் என்பவர் தெகிவளை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் இவரது சகோதரர்களான இருவரும் கூட கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியை கொலை செய்வதற்கு இரு தடவைகளில் முயற்சித்ததாகவும் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சி.வி. குணரத்தினாவை கொலை செய்ய முயற்சித்ததாகவும் இவர்கள்மீதுகுற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தெகிவளைப் பொலிசார் இவர்களை குற்றப் புலனாய்வு பொலிசாரிடம் ஒப்படைத்திருப்பதுடன் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களையும் கையளித்துள்ளனர். இவர்களது சகாக்[illegible] ஒன்று, சிவப்புநிற லான்சர் கார் ஒன்று, ஹொண்டா 250 ரக மோட்டார் சைக்கிள் ஒன்று என்பவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

பண்டாரவளைப் பகுதியிலுள்ள பெரிய மாளிகை ஒன்றின் கூரையினுள் ஒளிந்திருந்த இவர்களை பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கைது செய்துள்ளனர்

# அடுத்த ஆண்டு பாதுகாப்புசெலவாக 2700 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

1983 இல் 100 கோடி ரூபா பாதுகாப்பு செலவிற்கென ஒதுக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு செலவீனம் 2700 [illegible] கோடி ரூபாவாக அதிகரிக்கும் என பிரதி நிதியமைச்சர் பீரிஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வாண்டு அதாவது 1994 இல் 2500 கோடி ரூபா பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்டதாகவும் உள்நாட்டுப் போரினால் நாட்டின் பெரும்பாலான நிதிவளம் சுரண்டப்படுவதாகவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## கௌரவிப்பு

நோயாளர் நலன்புரி சங்கத்தின் அனுசரணையுடன் தமிழீழ தேசியத்தலைவரின் நாற்பதாவது அகவையை முன்னிட்டும் மாவீரர் தினத்தை முன்னிட்டும் யாழ் பொது மருத்துவமனை குருதி வைப்பகத்திற்கு குருதிக் கொடை அளித்தவர்களை கௌரவிக்கும் முகமாக நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்குகோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் குருதிக்கொடையாளர் கௌரவிப்பு விழா ஒன்று நடைபெறவிருக்கின்றது.

# ஐ. எம். எப் உடன்படிக்கை பகிரங்கம் செய்ய முடியாது

## சமசமாஜ கட்சி கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு செய்துகொண்ட உடன்படிக்கையை பகிரங்கப்படுத்த முடியாது என அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் சிறிலங்கா அரசு செய்து கொண்ட உடன்படிக்கையை பகிரங்கப்படுத்துமாறு சமசமாஜக் கட்சியினர் விடுத்த கோரிக்கையையே அமைச்சர் மேற்கண்டவாறு நிராகரித்தார்.

# 6-ம் ஆண்டில்

## ஈழநாதம்

## போட்டிகளும் விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதைமுன்னிட்டு சிறுகதைப் போட்டி கவிதைப் போட்டி என்பவற்றை நடாத்தவுள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளை பிரதிபலிக்[illegible]

தடவைகளில் முயற்சித்ததாக வும் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சி.வி. குணரத்தினாவை கொலை செய்ய முயற்சித்ததாகவும் இவர்கள்மீதுகுற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

பொலிசார் இவர்களிடமிருந்து கைக்குண்டு ஒன்று, இரட்டைக் குழல் துப்பாக்கி [illegible] இவர்களை குற்றப் புலனாய்வு பொலிசாரிடம் ஒப்படைத்திருப்பதுடன் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களையும் கையளித்துள்ளனர். இவர்களது சகாக்களான மேலும் சிலரை கைது செய்யவும் பொலிசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

(கொழும்பு)

1983 இல் 100 கோடி ரூபா பாதுகாப்பு செலவிற்கென ஒதுக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு செலவீனம் 2700 கோடி ரூபாவாக அதிகரிக்கும் என பிரதி நிதியமைச்சர் பீரிஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வாண்டு அதாவது 1994 இல் 2500 கோடி ரூபா பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்டதாகவும் உள்நாட்டுப் போரினால் நாட்டின் பெரும்பாலான நிதிவளம் சுரண்டப்படுவதாகவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# வேலைநிறுத்த ஊழியர் மர்ம வானில் கடத்தல்

## பலருக்கு கொலை பயமுறுத்தல்

(கொழும்பு)

பிரிமா பேக்கரி வேலை நிறுத்தத்தில்ஈடுபட்ட சிலரை இலக்க தகடுகள் அற்ற வாகனத்தில் வந்த நபர்கள் கடத்திச் சென்றதாக சுதந்திர தொழில் சங்க சம்மேளன சங்கத்தின் தலைவர் ராஜீத செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

நீல நிறம் கொண்ட இலக்கத் தகடு அற்ற ஹையஸ் வாகனத்தில் தொழிலாளர்கள் கடத்தப்பட்டதுடன் பல தொழிலாளர் வீடுகளுக்குச் சென்று அவர்களை கொலை செய்யப் போவதாகவும் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சுவிஸில் உள்ள அகதிகளை திருப்பியனுப்புவது நல்லதல்ல

## இலங்கை வந்த சுவிஸ் அதிகாரி

(கொழும்பு)

சுவிஸில் உள்ள இலங்கை அகதிகளை திருப்புவது உகந்த செயலாகப்படவில்லை என நிலைமைகளை ஆராய இலங்கை வந்த சுவிஸ் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுவிஸில் உள்ள அகதிகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கு முன் இங்குள்ள நிலைமைகளை நேரில் அறிவதற்காக இவ்வதிகாரி கொழும்பு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாப்பரசரின் வருகையை பௌ.சங்கம்எதிர்க்கவில்லை

## அவரின் நூலுக்கே ஆட்சேபமாம்

(கொழும்பு)

பாப்பரசரின் விஜயத்தை நாம் எதிர்க்கவில்லை என பௌத்த அமைப்பு அறிவித்துள்ளது. அவரின் கொழும்பு விஜயத்தை நாம் எதிர்க்கவில்லையாயினும் அவர் எழுதிய நூல் ஒன்றில் பௌத்த மதம் தொடர்பாக உண்மைக்கு மாறான விபரங்கள் இருப்பதினாலேயே அதை ஆட்சேபிக்கின்றோம் என பேராசிரியர் நளின் டி சில்வா தெரிவித்தார்.

பாப்பரசரின் கொழும்பு வருகையை சில பௌத்த மகா சங்கங்கள் எதிர்த்துள்ளமை தெரிந்ததே,

# கொழும்பினுள் புலிகளாம் சோதனை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் ஒரு கப்பல் மூலம் கொழும்பிற்குள் ஊடுருவியுள்ளதாக பாதுகாப்பு புலனாய்வுப்பிரிவு எச்சரித்ததையடுத்து கொழும்பில் சோதனை நிலையங்கள் அதிகரித்துள்ளன.

அமைச்சர்கள் மற்றும் எம்.பிகளின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. தலைநகரத்தில் உள்ள வீடுகள், விடுதிகள், ஹோட்டல்கள் தீவிர பரிசோதனைக்குள்ளாகியுள்ளன. வடக்கிலிருந்து வந்து தற்காலிக வசிப்பிடங்களில் இருக்கும் பல மாணவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் இவர்களில் பலரிடம் தம்மை அடையாளம் காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதுமில்லை என பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### போர் காலத்தில் சேவை

# உப தபாலதிபர்கள் கருத்தரங்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உப தபால்அதிபர்களுக்கான கருத்தரங்கு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது

இது வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தின் தலைமையில் நடைபெறும்.

போர்க்கால சூழ்நிலையில் தபால் சேவைகள் எவ்வாறு நடைபெறவேண்டும் என்பது பற்றிஇக் கருத்தரங்கில்விளக்கப்படவுள்ளது.

இதே போன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 19-ம் 20-ம்திகதிகளிலும்நடைபெறவிருக்கிறது வவுனியா மாவட்டத்தில் இம் மாதம் 12-ம் திகதியும் நடைபெற்றது தெரிந்ததே. (இ)

# இந்தியா கூட்டிச் செல்லப்பட்ட பதிவாளர் வீடு திரும்பினார்

## இந்திய அதிகாரிகளால் சாட்சியம் பதிவு

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக சிறிலங்கா பொலிசாரால் இந்தியா கூட்டி செல்லப்பட்ட விவாகப்பதிவாளரான வயோதிபர் தமது வீடு வந்துசேர்ந்தார்.

கடந்த மாதம் இவர் சி.ஐ.டி. பொலிசாரால் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு கொண்டு செல்லப்பட்டு அதன்பின் இந்தியா அதிகாரிகளின் விசாரணைக்கென இந்தியா கொண்டு செல்லப்பட்டார். ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் இவரின் சாட்சியம் பெறப்பட்டபின் அவர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

# பட்டம் ஏற்றிய சிறுவன் கிணற்றில் வீழ்ந்து மரணம்

தோட்டவெளியில் பட்டம் ஏற்றிய சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறிவிழுந்து மரணமானார். புலோலி மேற்கு கதிரவேற்பிள்ளை வீதியைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை சோதிருபன் (10) என்பவரே கிணற்றில்விழுந்து மரணமானவராவார்.

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். நடராசா பிரேத பரிசோதனையின் இறுதியில் விபத்து மரணம் எனத்தீர்ப்பு வழங்கினார்.

ஈழநாதம் மக்கள் தினசரி ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதைமுன்னிட்டு சிறுகதைப் போட்டி கவிதைப் போட்டி என்பவற்றை நடாத்தவுள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளை பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

★ சிறுகதை ★ கவிதை

### போட்டிகளில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளையோ சமூகப் பிரச்சினைகளையோ சித்திரிக்கும் வண்ணம் அமையலாம்

★ படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதைஉறுதிப்படுத்த வேண்டும்.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31 ம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17. 02. 1995 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் ஆறாம் ஆண்டின் ஆரம்ப விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு ஆறாம் ஆண்டின் ஆரம்ப நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம் ஆறாம் ஆண்டுப் போட்டி' என கடித உறையில் இடது பக்கமேல் மூலையில் குறிப்பிடப்பட்டு,

**ஆசிரியர்,**
**ஈழநாதம்**
**31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

# அகதிகளின் படகு விடுவிக்க... அமைச்சர்கதிர்காமர்பேச்சுவார்த்தை

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீன்பிடிப் படகுகளின் நடமாட்டம், மற்றும் தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை அகதிகளின் மீன்பிடி வள்ளங்களை விடுவிப்பது என்பன தொடர்பாகவும் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமது விஜயத்தின்போது இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தைகள் பயன் அளிப்பதாக அமைந்துள்ளது என்றுவெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார ராஜாங்க அமைச்சர்ஆல்.எல். பாட்டியா தலைமையிலான உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தையில் இரு நாட்டுத் தூதுக் குழுவினருடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின்போது இவ் விடயங்கள் ஆராயப்பட்டது எனவும், இவை தொடர்பாக சிறந்த துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கொள்கை ரீதியாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

# இலங்கை மீனவர் படகுகளை திருப்பித்தர ஜெயலலிதா முட்டுக்கட்டை

(சென்னை)

தமிழ் நாட்டில் இருக்கும் நூற்றிற்கும் மேற்பட்ட மீன்பிடி வள்ளங்களை மீண்டும் இலங்கை மீனவர்கள் பெற்றுக்கொள்வதில் தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இது விடயத்தில் இந்திய மத்திய அரசு எவ்வித பிரச்சினைகளையும் ஏற்படுத்தவில்லை எனவும், எனினும் தமிழக அரசு முட்டுக்கட்டை போட்டு வருவதாகவும், மீன்பிடி நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் இந்திக குணவர்த்தனா கூறியுள்ளார்.

தமிழ் நாட்டிற்கு, இலங்கை மீனவர்கள் பலரும் அகதிகளாக சென்றபோது அவர்களுக்கு சொந்தமான வள்ளங்கள் தமிழ்நாடு கடற்கரையோரங்களில் தமிழக அரசாங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டது தெரிந்ததே.

# உயர் பொலிஸ் அதிகாரி விடுதலைக்கு வீரப்பன் நிபந்தனை விதிப்பு

## 1000 கோடி ரூபாவுக்கும் கோரிக்கை

(சென்னை)

துணை நிலையப் பொலிஸ் கண்காணிப்பாளர் ஒருவர் உட்பட மூன்று பேரைக் பணயமாகப் பிடித்து வைத்துள்ள சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன், அவர்களை விடுவிப்பதற்கு ஆயிரம் கோடி ரூபாவை மத்திய அரசு தர வேண்டும் என்பது உட்பட பத்துக் கோரிக்கைகளை முன் வைத்துள்ளார்.

குடியரசுத் தலைவர் பொது மன்னிப்பு வழங்க வேண்டும், தன் மீதும் தனது குழுவினர் மீதும் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்பன போன்றவையும் இக்கோரிக்கைகளில்அடங்கும்

திருமுனைக்காட்டுப் பகுதியிலிருந்து வெளியே வந்த அர்ச்சுனன் என்பவர் இக் கோரிக்கைகளை கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிவித்துள்ளார். இவர் வீரப்பனின் தம்பி என்பது குறிப்பிடத்தக்கது.

# வீரப்பனைத் தேடுவதை பொலிசார் கைவிட்டனர்

சந்தனமரக் கடத்தலில் ஈடுபடும் வீரப்பனைத் தேடும் முயற்சியை இதற்கென அனுப்பப்பட்ட விசேட அதிரடிப் படையினர் இந்தமாதம் 4-ம் திகதியிலிருந்து கைவிட்டுள்ளனர்.

வீரப்பன், ஒரு பொலிஸ் உயரதிகாரியையும் அவரது உறவினர் ஒருவரையும் பணயமாக வைத்திருந்து விடுத்துள்ள நிபந்தனையின்படியே விசேட அதிரடிப் படையினர் தங்கள் நடவடிக்கைகளை கைவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராஜீவ்குடும்பத்திற்கான பாதுகாப்பு மேலும் 5 வருடங்களுக்கு நீடிப்பு

(டில்லி)

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவியான சோனியா காந்திக்கும்அவரது பிள்ளைகளுக்கும் இந்திய அரசினால் வழங்கப்படும் மிகவும் பாதுகாப்பான எஸ்பிஜி வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. அவரது உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைத் தொடர்ந்து அவருக்கான பாதுகாப்பு நீடிக்கப்பட்டிருப்பதாகஇந்திய உள்துறைஅமைச்சர்தெரிவித்துள்ளார்.

சட்டமூலம் கடந்த் திங்கள் இந்திய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமுன்னாள் பிரதமர்களான வி. பி. சிங்கிற்கும், சந்திரசேகருக்கும் அவர்களது குடும்பத்தவர்களுக்கும் எஸ்பிஜி பாதுகாப்பு

# தஞ்சாவூர் மாநாட்டில் ஒரு ரூபாவுக்கு உணவு

(சென்னை)

தமிழ்நாடு தஞ்சாவூரில் அடுத்த ஆண்டில் நடைபெறவுள்ள எட்டாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வருகை தரும் பிரமுகர்களுக்கு ஒரு ரூபா செலவுடன் உணவுப்பார்சல்களை வழங்க தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மாநாட்டின் போது சுமார் ஐந்து லட்சம் உணவுப் பார்சல்களை தயாரிப்பது எனவும். இதற்கென ஐந்து சமையல் நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது எனவும் மாநாட்டு விருந்தோம்பல் குழுவின் தலைவரும், மாநில உணவுத்துறை அமைச்சருமான ஆர். எம். வீரப்பன் கூறியுள்ளார்.

# அணுகுண்டு முத்திரை அமெரிக்கா கைவிட்டது

இரண்டாம் உலக யுத்தத்தின்போது, ஜப்பானை சீர்குலைத்த அணு குண்டைக் கொண்ட புதிய முத்திரை ஒன்றை வெளியிடும் திட்டத்தை அமெரிக்க தபால் சேவை கைவிட்டுள்ளது.

அணுகுண்டு போடப்பட்ட ஐம்பதாவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு காளானைப் போல எழுந்த புகை மண்டலத்தைக் கொண்ட முத்திரையை வெளியிட திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் ஜனாதிபதி கிளின்டனின் நிர்ப்பந்தத்தின் காரணமாக இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக யுத்தம் முடிந்து விட்டது என்பதை அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் அறிவிக்கும் காட்சியைக் கொண்ட முத்திரை வெளியிடப்படவுள்ளது.

# ரஷ்யாவுக்கு பெருமளவில் சவப்பெட்டிகள் செல்லும்

## செசன்யா கிளர்ச்சியாளர் எச்சரிக்கை

இங்கிருந்து பெருந்தொகையான சவப்பெட்டிகளை ரஷ்யாவுக்கு அனுப்பி வைப்போம். இவ்வாறு செசன்யா கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். இவ் அமைப்பின் தலைவர்களில் ஒருவர் குரோஸ்னியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது மேலும் கூறியதாவது குடியரசை ஆக்கிரமிக்கும் ரஷ்யாவின் முயற்சியில் ரஷ்யா பெருமளவு உயிர் இழப்புக்களை எதிர் நோக்கும் எனவும் குறிப்பிட்டார் அத்துடன் என்னைப் பொறுத்தவரை மூன்று முதல் ஐந்துக்கு குறையாத ரஷ்யத் துருப்புக்கள்என்னால் [illegible]ல்லப்படுவர் எனவும் [illegible]ரிவித்தார்.

ரஷ்யாவிலிருநது பிரிந்து செல்ல விரும்பும் செசன்யாவினுள் ரஷ்யத் துருப்புக்கள் ஊடுருவி இருப்பதும், அங்கு முன்னேறி வருவதும் தெரிந்ததே. ரஷ்யத் துருப்புக்கள் மணிக்கு 12 மைல் வேகத்தில் முன்னேறி வருவதாக கூறப்பட்ட போதும் ஆங்காங்கு எதிர்ப்புகள் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. திங்களன்று அதிகாலையில் ஊடுருவத் தொடங்கிய ரஷ்யத் துருப்புக்களில் இது வரையில் ஒன்பது பேர் உயிரிழந்து விட்டதாக கூறப்படுகிறது.

# உலகப் பெண்கள் மாநாடு அடுத்த செப்டம்பரில்

(பீகிங்)

ஐக்கிய நாடுகள் சபையின் நான்காவது உலகப் பெண்கள் மகாநாடு அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் சீனாவின் தலைநகர் பீகிங்நகரில் நடை க்கான நடவடிக்கை, அபிவிருத்தி மற்றும் சமாதானம் ஆகியன அமையும்.

பெண்கள் சம்பந்தமான முதலாவது ஐ.நா மகாநாடு

# 2ஆம் யுத்தகால தளபதி 102 வயதில் காலமானார்

இரண்டாம் உலக யுத்த காலத்தில் நேச நாடுகளின் கடைசி சிரேஷ்ட கொமாண்டரான ஜெனரல் ஸ்டனிஸ்லோ மெக்ஸெக் தனது 102 ஆவது வயதில் எடின்பரோவில் காலமானார்.

மிகச் சிறந்த போலந்து தளபதிகளில் ஒருவராக விளங்கிய மெக்ஸெக், போலந்தின் முதலாவது கவசப் படைப் பிரிவை அமைத்து பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, வடஜெர்மனி ஆகிய நேச நாடுகளுடன் சேர்ந்து போரிட்டார்.

ஹாலந்தில் உயிர் நீத்த தனது சகவீரர்கள் அடக்கம் செய்யப்பட்ட பரேடாவில் அவரது சடலம் புதைக்கப்படும் என போலந்து அரசாங்கம் அறிவித்துள்ளது,

போலந்து ஹிட்லரினால் ஆக்கிரமிக்கப்பட்டபோது - நாஸி ஆக்கிரமிப்பிலிருந்து தப்பிச் சென்று ஸ்கொட்லாந்தின் எல்லை நகரான டுன்சில் முதலாவது கவசப் படையை அவர் நிறுவினார். நோர்மண்டி படையெடுப்பின் போது ஹிட்லரின் 7ஆவது சைன்யத்தை அழிப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

இதன் பின்னரான காலப் பகுதியில் போலந்தின் கம்யூனிச ஆட்சியாளர்கள் அவரது பிரஜாவுரிமையைப் பறித்ததால் அவர் பிரிட்டனில் வசிக்க ஆரம்பித்தார்.

கம்யூனிச ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பின் 89-ம் ஆண்டில் போலந்து அவரிடம் மன்னிப்புக் கோரியதுடன் போலந்தின் அதியுயர் வெள்ளைக் கழுகு விருதையும் அவருக்கு அளித்து கௌரவித்தது.

# ஊழியர் பற்றாக்குறை செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்தில் ஊழியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய புதிய அரசஅதிபர் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஊழியர் பற்றாக்குறை காரணமாக செயலக வேலைகள் தாமதமாகுவதாகவும் இவற்றை நிவர்த்திக்க புதிய ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க] உள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# வவு. கல்வியியல் கல்லூரி ஜனவரியிலேயே அனுமதி

(வவுனியா)

வவுனியா கல்வியியல் கல்லூரியின் 1994-ம் ஆண்டு கல்வி நெறிக்கென தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் நூறு பேரும் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே கல்லூரியில் அனுமதிக்கப்படுவார்கள் என கல்லூரியின் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

இக்கல்லூரியின் இரண்டாம் கட்ட நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாமலிருப்பதனாலும் - தளபாடம், இடவசதி, நீர்வசதி, மின் விநியோகம் ஆகியவற்றில் குறைபாடுகள் இருப்பதனாலுமே 94 ம் ஆண்டு கல்வி நெறிக்குரிய மாணவர்கள் 95-ம் ஆண்டில் அனுமதிக்கப் படுகிறார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


# பிறந்த நாள் வாழ்த்து

## விஜயரட்ணம் நவீன்

203/2, மில்லர் வீதி, அரியாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயரட்ணம் சிவநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் நவீன் இன்று தனது முதலாவது பிறந்த நாளை சவூதி அரேபியாவில் கொண்டாடுகிறார். இவரை சவூதிஅரேபியாவில் வசிக்கும் அப்பா, அம்மா, நண்பர்கள், மாமாக்கள் மற்றும் தமிழீழத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மாமார், மாமிமார், பெரியப்பா, மாமா, மச்சாள்மார்களான மாலதி, தர்

## மேலும் 5 வருடங்களுக்கு நீடிப்பு

(டில்லி)

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவியான சோனியா காந்திக்கும் அவரது பிள்ளைகளுக்கும் இந்திய அரசினால் வழங்கப்படும் மிகவும் பாதுகாப்பான எஸ்பிஜி பாதுகாப்பு மேலும் -5 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. அவரது உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைத் தொடர்ந்து அவருக்கான பாதுகாப்பு நீடிக்கப்பட்டிருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசேட சட்டமூலம் கடந்த திங்கள் இந்திய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. முன்னாள் பிரதமர்களான வி. பி. சிங்கிற்கும், சந்திரசேகருக்கும் அவர்களது குடும்பத்தவர்களுக்கும் எஸ்பிஜி பாதுகாப்பு மேலும் 5 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த செப்டம்பரில்

(பீகிங்)

ஐக்கிய நாடுகள் சபையின் நான்காவது உலகப் பெண்கள் மகாநாடு அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் சீனாவின் தலைநகர் பீகிங்நகரில் நடைபெறவுள்ளது.

இம்மகாநாட்டின், முக்கிய கருப்பொருளாக சமத்துவத்துக்கான நடவடிக்கை, அபிவிருத்தி மற்றும் சமாதானம் ஆகியன அமையும்.

பெண்கள் சம்பந்தமான முதலாவது ஐ.நா மகாநாடு மெக்சிக்கோ நகரில் 1975ம் ஆண்டில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## சீனாவுடன் அமெரிக்கா இராணுவ ரீதியிலான உறவு

[டில்லி]

சீனாவுடன் இராணுவத் தொடர்புகளை பலப்படுத்த அமெரிக்கா எடுக்கும் முயற்சிகள் அதன் அயல்நாடான இந்தியாவுக்கு அச்சுறுத்தல் அல்ல. இவ்வாறு அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் மூன்றாவது அதிகாரியான வால்டர் ஸ்கோ கொம்பே கூறியுள்ளார்.

இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்துப் பேச்சு நடத்திய அவர் மேலும் குறிப்பிடுகையில், அமெரிக்கா, புதுடில்லி ஆகியவற்றின் நலன்களுக்காகவே வாஷிங்டன் பீகிங்குடன் பாதுகாப்பு உறவுகளை பலப்படுத்த முயல்வதாகவும் தெரிவித்தார்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு

15-07-1974

வீரச்சாவு

17-12-1993

**கப்டன் கந்தன்**
**(ராசா சசிகுமார்)**

வெள்ளை மணல் பரப்பாம் மணற்காட்டிலே,
பிள்ளையானாய் ராசாவுக்கே ஆடி மாதத்திலே
சூட்டிய பெயரே சசிகுமார் (14) வயதினிலே
களங்கள் ஆடி அடிமையாய் வாழ மாட்டோம்
என்று சொல்லி அயராமல் தூங்குகின்றாய்
எம் சசியே

கப்டன் கந்தன் குடும்பத்தினர்

மணற்காடு

(10380)

# செயலக நடவடிக்கைகளை இலகுவாக்க அரச அதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்தில் ஊழியர்களின் வினைத்திறனை பயன்படுத்தி நிர்வாக செயற்பாடுகளை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் யாழ் மாவட்டத்திற்கு புதிய அரச அதிபர் நியமிக்கப்பட்டதும் இவர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக தெரிய வருகின்றது.

இதன் பயனாக செயலகத்திலும் சில பிரதேச செயலகங்களிலும் உள்ள ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் செயலக ஊழியர்களிற்கு அதிகாரங்கள் பகிர்ந்தளித்து நிர்வாக செயற்பாடுகளை மேலும் இலகுவாக்கி விரிவுபடுத்த ஆலோசிக்கப்பட்டு வருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(இ,தி)

## வேலணை பிரதேச செயலர் அரச அதிபரால் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச செயலராக இளங்கோ என்பவர் புதிய அரச அதிபரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தமது கடமைகளை உடன் பொறுப்பேற்கவுள்ளார்.

இவ்வாறு யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதங்களாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபரே வேலணை பிரதேச செயலரின் கடமைகளைக் கவனித்து வந்தார். தற்போது யாழ். மாவட்டத்தில் புதிய அரச அதிபர் பொறுப்பேற்றுக் கொண்டதும் நல்லூர் பிரதேச செயலகத்தில் பதில் பிரதேச செயலராக கடமையாற்றிக் கொண்டிருந்த இளங்கோவை வேலணை பிரதேச செயலராககடமையாற்றுமாறு பணித்துள்ளார்.

கடந்த மாதம் தீவக இடம் பெயர்ந்தோர் நலன் காக்கும் கழகம் வேலணை பிரதேச மக்களின் நலன்களை கவனிப்பதற்காக பிரதேச செயலர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என அரச அதிபரிடம் கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

[இ], [இ]

## தபாலதிபர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் ஐந்து தபால் அதிபர்களிற்கு புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களிற்கான கடிதங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 15-ம் திகதியில் இருந்து இவர்களது நியமனம் நடைமுறைக்கு வருகிறது. இவர்கள் கொழும்பு சென்று ஒரு மாத பயிற்சியை முடித்ததும் இவர்கள் யாழ். மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கடமையாற்ற உள்ளனர்.

(இ)

## சேதமடைந்த ஆலயங்கள் விபரம் அனுப்ப பணிப்பு

மாவட்ட மட்டத்தில் இராணுவத் தாக்குதலால் சேதமடைந்த ஆலயங்களின் விபரங்களை வட - கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர்களை சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளது.

1987க்கு பின்னர் இராணுவத்தினரின் விமானத் தாக்குதலால் முற்றாக அழிந்த, சேதமடைந்த ஆலயங்களை மீண்டும் புனருத்தாரணம் செய்வதற்கான பணியை ஆரம்பிப்பதற்காகவே இவ்விபரங்கள் திரட்டப்படுகின்றனவெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான விபரங்களை சகல பிரதேச செயலர்கள் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்கள் ஊடாக சேகரித்து மதிப்பிட்டு வருகின்றனர்.

[05]

203/2, மில்லர் வீதி, அரியாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயரட்ணம் சிவநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் நவீன் இன்று தனது முதலாவது பிறந்த நாளை சவூதி அரேபியாவில் கொண்டாடுகிறார். இவரை சவூதிஅரேபியாவில் வசிக்கும் அப்பா, அம்மா, நண்பர்கள், மாமாக்கள் மற்றும் தமிழீழத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மாமார், மாமிமார், பெரியப்பா, மாமா, மச்சாள்மார்களான மாலதி, தர்சினி, பவனுஷா, ஜது, கிருஷாந் மச்சான் அயலிலுள்ள அக்காமார்கள் அண்ணாமார்கள் உற்றார் நண்பர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்

தகவல்
சிவா மாமி

(10315)


**சிவாகி கல்வி நிலையம்**

**சிவன்வீதி, சாவகச்சேரி.**

94 பரீட்சை எடுத்த மாணவருக்கான

மீட்டல் வகுப்பு

**ஆரம்பம்: 18. 12. 94 காலை**
**7. 30 மணிக்கு**

(10416)

**வியாபாரிகளே!**

கிறிஸ்மஸ், பாடசாலை, எவர்சில்வர், பிளாஸ்ரிக் பொருட்களையும் மற்றும்,

தையல் உபகரணங்கள், றேடியோ, கைக்கடிகாரம், பொலித்தீன் வகைகள், அழகு சாதனப் பொருட்களை மொத்தமாகப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**ஜெயா அழகுமாடம்**

187, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**சில்லறை வியாபாரம்**

177 A மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

(சி/10903)

சிந்தனைக்கு

செயலற்ற நிலையே சுமைகளில் பயங்கரமானது.
- நிக்கோலா புவோலோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## சந்திரிகாவின் கையில்

இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணப்பட வேண்டியது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு முன்னுள்ள முக்கிய பொறுப்பாகும். அதுவும் யுத்தத்தைத் தவிர்த்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பது சிங்கள மக்கள் வழங்கிய ஆணையுமாகும்.

இதனை தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் மிகவும் தெளிவாகவே வலியுறுத்தியுள்ளார். அவர் 'ரைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் ''சிங்கள மக்கள் அமைதியை ஏற்படுத்தும் வகையில் சந்திரிகாவிற்கு பெரும் வெற்றியைக் கொடுத்துள்ளார்கள். இந்த வெற்றி வாய்ப்பை சந்திரிகா பயன்படுத்துவார் என்று எதிர்பார்க்கின்றேன்'' எனத் தெரிவித்திருந்தார்.

இந்தவகையில், சந்திரிகா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ''சமாதான ரீதியிலான அரசியற் தீர்வு' காண வேண்டிய முக்கிய கடப்பாடு உடையதாக இருக்கின்றது. அதாவது, ஒரு தசாப்தத்திற்கு மேலாக நடைபெற்ற போரில் சலிப்படைந்த சிங்கள மக்கள் இனப்பிரச்சினை சமாதான ரீதியில் அரசியல் தீர்வு காண சந்திரிகா அரசிற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள் என்றே கூற வேண்டும்.

இதேவேளை தேர்தல் பிரசாரத்தின்போது இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்த சந்திரிகா குமாரதுங்காவோ அன்றி பொதுஜன ஐக்கிய முன்னணியினரோ அதற்கான தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. அதுகுறித்து மக்களுக்கு விளக்கவுமில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணி இவ்வாறு நடந்து கொண்டமைக்கு சமாதானத்தின் மீது அவர்களுக்கு இருந்த நம்பிக்கையீனமா? அல்லது மக்கள் சமாதானத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கை மீது எழுந்த சந்தேகமா? என்பதைத் தெளிவாக அறுதியிட்டுக் கூறமுடியாது.

இந்தநிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வுத் திட்டம் என்ன என்பதை மக்கள் முன் வைத்து 'அங்கீகாரம் பெறாமை பொ. ஐ. முன்னணியின் தவறே ஒழிய வேறு எவரின் தவறும் அல்ல. ஆனால், வாக்களித்த மக்கள் எவ்வாறாகிலும் சமாதான ரீதியில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே வாக்களித்துள்ள

# பொலிசாருடன் மன்னார் வந்த தரையிறக்கு கப்பலில் கோளாறு

### மீண்டும் கொழும்பு திரும்பியது

(கொழும்பு)
இராணுவ விசேட பயிற்சி பெற்ற பொலிசாருடன் மன்னார் நோக்கி வந்த கடற்படையின் தரையிறக்கு கப்பல் ஒன்று தொழில்நுட்ப கோளாறு காரணமாக கொழும்பு திரும்பியது,

நீண்டகாலம் யுத்த முனையில் பணியாற்றியவர்களுக்கு பதிலாக இந்த பொலிஸ் குழு மன்னார் நோக்கி வந்தது கப்பல் வந்து சேராததினால் மன்னாரில் காத்து நின்ற இடமாற்றலாகி செல்லும் பொலிசார் ஏமாற்றமடைந்தனர். எனினும் திரும்பி சென்ற புதிய தொகுதியினர் மன்னாருக்கு அனுப்பி வைக்கப்படுவர்என்றுபொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### வகுப்புக்கள்

(தென்மராட்சி)
தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திற் கடமை புரியும் சகல தொண்டர் ஆசிரியர்களுக்கும் அண்மையில் நடைபெறவுள்ள ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கானபொது அறிவு, பொது உளச்சார்பு வகுப்புகள்சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது என தென்மராட்சிக் கோட்ட கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில்

## வாக்களிப்பு நிலையங்கள் இருக்கவில்லைத்தான்

### தெரிவத்தாட்சி அதிகாரி ஒப்புக்கொண்டார்

(கொழும்பு)
மானிப்பாய், கோப்பாய், பருத்தித்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டது போல் வாக்களிப்பு நிலையங்கள் இருக்கவில்லை என்பதை யாழ் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியாக இருந்த டி. எல். பெரேரா ஒப்புக் கொண்டுள்ளார்.

யாழ் மாவட்ட தேர்தல் ஆட்சேபனை வழக்கில் மனுதாரரில் ஒருவரின் சட்டத்தரணியான நிரஞ்சன் சின்னத்தம்பி குறுக்கு விசாரணை செய்தபோதே அவர் மேற்கண்டவாறு ஒப்புக்கொண்டார்.

கொழும்புடன்-செயலகத்திற்கு

## தொலைத்தொடர்பு வசதி ஏற்படுத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)
யாழ் செயலகத்திற்கு கொழும்புடன் தொலைத்தொடர்பு வசதியை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்க உள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வசதி செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றதும் தகவல் பரிமாற்றத்திற்கான கால தாமதம் நிவர்த்திக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

# விண்ணில் இருந்து திரும்பியபோது மக்களின் முக்கியத்துவம் தெரிந்தது

### - விண்வெளி வீராங்கனை ஹெலன்

(கொழும்பு)
விண்வெளியில் இருந்து திரும்பிய பின்பே மக்கள் எவ்வளவு தூரம் முக்கியமானவர்கள் என்பதை உணரமுடிகின்றது. இவ்வாறு உலகின் இரண்டாவது பெண் விண்வெளி வீராங்கனையான ஹெலன் ஹார்மான் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்புக்கு வந்த இவர் ரஷ்ய-பிரிட்டிஷ் ஒத்துழைப்பிலான விண்வெளித் திட்டத்தின் கீழ் விண்வெளிக்கு சென்ற முதலாவது பிரிட்டிஷ் பிரஜையுமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது,

நான் மீண்டும் ஒரு தடவை விண்வெளிக்கு செல்ல விரும்புகின்றேன். விண்வெளிக்கு சென்று திரும்புபவர்களில் சிலர் ஆன்மிகத்துறையுடன் ஈடுபாடு கொண்டவர்களாகவும் மாறிவிடுகின்றனர்.

நான் விண்வெளிக்கு செல்ல தெரிவு செய்யப்பட்ட விடயமும் சுவையானது-பத்திரிகைகளில் விண்வெளி வீரர்கள், வீராங்கனைகள் தேவை என விளம்பரம் செய்யப்பட்டது. சுமார் பதின்மூவாயிரம் பேர் விண்ணப்பித்திருந்த இடத்தில் நானும் இன்னொருவருமே இறுதியில் தெரிவானோம் எனக்கு இவ்வாய்ப்பு கிடைக்குமென நான் எதிர்பார்க்கவே இல்லை. பின் தெரிவான எம் இருவருக்கும் மாஸ்கோவிலுள்ள யூரிககாரின் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் பதினெட்டு மாதங்கள் பயிற்சியளிக்கப்பட்டது. 91-ம் ஆண்டு மே மாதம் நான் முதற் தடவையாக விண்வெளிக்கு சென்றேன் எனவும் தெரிவித்தார்.

''விண்வெளிக்குள் பிரயாணம்'' என்ற தலைப்பில் ஹெலன் ஹார்மான் கொழும்பில் பிரிட்டிஷ் கவுன்சிலின் கேட்போர் கூடத்தில் உரையாற்றியும் உள்ளார்.

# வவுனியா மாவட்ட உயர்தர பரீட்சை முடிவுகள்

### இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம் சிறப்புத் தேர்ச்சி

(வவுனியா)
அண்மையில் வெளியான க. பொ. த உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் பாடரீதியில் சிறந்த பெறுபேறு பெற்றுள்ளது.

இப்பாடசாலையில் இருந்து 103 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். அவர்களில் 83 பேர் சித்தியடைந்துள்ளனர்.

உயிரியல் பிரிவில் இப்பாடசாலையின் எம். யோகராணி பி 3 சி, பெறுபேற்றை பெற்றுள்ளார். வர்த்தக பிரிவில் பி. பத்மரதி ஏ, பி 2சி பெற்றுள்ளார்.

கணித பிரிவில் தாராகுளம் மகாவித்தியாலய மாணவன் கமேணஸ்வரன் 2ஏ, 2 பி பெறுபேற்றை பெற்றுள்ளார். தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் க. இராஜன் 2ஏ, 2சி, பெற்றுள்ளார்.

வர்த்தக பிரிவில் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தை சேர்ந்த இரு மாணவர்கள் 2ஏ 2பி பெறுபேற்றை பெற்றுள்ளனர் இப்பாடசாலையில் விஞ்ஞானபிரிவில் 14 பேரும், வர்த்தக பிரிவில் 31 பேரும், கனகராயன் மகாவித்தியாலயத்திலிருந்து 9 பேரும், பல்கலைக்கழக தகுதி பெற்றுள்ளனர்.

## சமூக ஒழுக்கக்கேட்டிற்கு அபராதம் விதிப்பு

### பருத்தித்துறை நீதிமன்று தீர்ப்பு

(பருத்தித்துறை)
திருமணமான ஆணொருவரும் திருமணமான பெண் ஒருவரும் சமூக ஒழுக்கக்கேடாக நடந்து கொண்டபோது நாகர்கோவில் தமிழீழ காவல் துறையினரிடம் வகையாகச் சிக்கிக் கொண்டனர். வடமராட்சி கிழக்கு அம்பனைச் சேர்ந்த ஆணொருவரும் பெண்ணொருவருமே காவல் துறையினரிடம் சிக்கிக் கொண்டவர்களாவர்.

காவல் துறையினர் இச்சமூக ஒழுக்கக்கேட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆணையும் பெண்ணையும் பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றத்தில்நீதியாளர், செல்வி பிரதீபா முன்னிலையில் ஆஜர் செய்தனர். எதிரிகள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். நீதியாளர் எதிரிகளுக்குதலா 5000 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். எதிரிகள் அபராதத்தைச் செலுத்தத்தவறின் 200 நாட்கள் சிறைத் தண்டனை விதிக்குமாறும் உத்தரவிட்டார். (25)

## நாடக பயிற்சிவகுப்பு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக சங்கானை

## சீனி வாங்கி வருவதாக மூதாட்டியிடம் மோசடி

### 950 ரூபாவுடன் நபர் தலைமறைவு

(திருநெல்வேலி)
வீட்டில் ஒருவரும் இல்லாத வேளையில் குறைந்த ... தருவதாகவும் கூறி 950 ரூபாவை அபகரித்துச் சென்றுள்ளார்.

திட்டம் என்ன என்பதை மக்கள் முன் வைத்து அங்கீகாரம் பெறாமை பொ. ஐ. முன்னணியின் தவறே ஒழிய வேறு எவரின் தவறும் அல்ல. ஆனால், வாக்களித்த மக்கள் எவ்வாறாகிலும் சமாதான ரீதியில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே வாக்களித்துள்ளனர் என்பது நிச்சயம்.

இல்லாது போனால் 'இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு' என்ற சொல்லுக்கு மட்டும் அவர்கள் வாக்களித்து இருக்க மாட்டார்கள். அத்தோடு, இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு என்பது உயர்ந்தளவினதானதொரு சுயாட்சியுடன் கூடியதாகவே இருக்க முடியும் என்பதும் அவர்களுக்கு விளங்காமல் இருக்க நியாயமில்லை.

ஏனெனில் வடக்கு - கிழக்கு தற்காலிக இணைப்புடன் கூடிய சிறிலங்கா - இந்திய சமாதான உடன்படிக்கையே தமிழ்மக்களினால் நிராகரிக்கப்பட்ட நிலையில், உயர்வான சுயாட்சித் திட்டம் ஒன்றே தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வாய்ப்பு உண்டு என்பது எவரும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதொன்றேயாகும். இந்த நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்காமல் தற்பொழுது தீர்விற்கான எல்லைகள் பற்றிப் பேசுவதோ, சிந்திப்பதோ சந்திரிகா தலைமையிலான கட்சியின் பிழை என்றே கூறவேண்டும்.

அத்தோடு இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு என்பது தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளும் ஒரு திட்டத்தின் அடிப்படையிலேயே சாத்தியமாகும் என்பதும் எவருக்கும் புரியாத விடயமல்ல' மேலும் தமிழ்மக்கள் மீது தாம் விரும்பியவாறு தீர்வுத் திட்டம் ஒன்றை திணிக்க முடியாது என்பதையும் அண்மைக் கால வரலாறு தெளிவாகவே புகட்டியும் உள்ளது- ஆகையினால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணக் கூடிய தமிழ்மக்களின் பாதுகாப்புடன் கூடிய சுயாட்சிக்கு ஏற்ற விதத்தில் தீர்வுத் திட்டத்தை சந்திரிகா அரசாங்கம் முன்வைக்க வேண்டும்

இவற்றைக் கருத்திற் கொள்ளாது தீர்வுத் திட்டம் ஒன்றைஅரசாங்கம் முன்வைக்குமானால் அது சிங்கள மக்கள் சந்திரிகா அரசிற்கு வழங்கிய ஆணையை அது மீறியதாகவே இருக்கும். இதற்கு சந்திரிகா அரசாங்கம் உள்நாட்டு வெளிநாட்டு அழுத்தங்களைக் காரணமாக சாட்ட முற்படினும் கூட அது அரசாங்கத்தின் விருப்பமின்மையாகவே கொள்ளப்படும்.

இந்தவகையில் சந்திரிகா அரசாங்கம் எவ்வாறு செயற்படப் போகின்றது என்பதே இலங்கையின் எதிர் காலத்தைத் தீர்மானிக்கும். அதாவது, போரா? சமாதானமா? என்பது அவரது கையிலேயே உள்ளது. தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டதுபோல் ''இவை அனைத்துமே அவரது - சந்திரிகா குமாரதுங்காவின் - நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது.''

103 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். அவர்களில் 83 பேர் சித்தியடைந்துள்ளனர்.

உயிரியல் பிரிவில் இப்பாடசாலையின் எம். யோகராணி ... ஜன் 2ஏ, 2சி, பெற்றுள்ளார்.

வர்த்தக பிரிவில் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தை சேர்ந்த இரு மாணவர்கள்

# மாவீரர் சோலை சேமிப்பு மன்னாரிலும் ஆரம்பம்

மன்னார் மாவட்ட த. பொ. மே. நிறுவனத்தின் கிராமிய நிதியம் அறிமுகப்படுத்தும் மாவீரர் சோலை சேமிப்புத் திட்டத்தை கடந்த 7-ஆம் திகதி காலை 10 மணிக்குஅங்குரார்ப்பணம் செய்து வைத்தது. இந்நிகழ்வு வினாயகபுரம் விவசாய கூட்டுறவுச் சங்க பணிமனையில் திரு. பிறேம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் போராளிகளும், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

நாச்சிக்குடாவைச் சேர்ந்த செல்வி நீக்கிளால் பரிமளா றோகினி, முழங்காவிலைச் சேர்ந்த செல்வன் சச்சிதானந்தம் கஜன் ஆகிய இரு குழந்தைகளினது பெயரில் தலா 5000/- ரூபா செலுத்தி சேமிப்பை அவர்களின் பெற்றோர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். சேமிப்பு பத்திரம் த. பொ. மே. நிறுவன விவசாய/சூழல் பாதுகாப்பு பொதுமுகாமையாளர் திரு. விசு அவர்களினால் வழங்கப்பட்டது. அதைத்தொடர்ந்து முழங்காவில் வட்டத்தைச் சேர்ந்த 177 விவசாயிகளுக்கு 1994/95 காலபோக விவசாய கடன் வழங்கி விவசாய செய்கை ஊக்குவிக்கப்பட்டது

# மீன்பிடி உபகரணங்கள் சங்கம் ஊடாக விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களை அமைத்துக் கொள்ளாதவர்கள் அவற்றினை அமைப்பதுதொடர்பாக தத்தமது பகுதி கடற்றொழில் பரிசோதகருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை, வேலணை, சங்கானைஆகிய பகுதிகளில் கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்புக்கள் இயங்கி வரும் கிராம சேவகர் பிரிவுகளில்ஒவ்வொரு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களை அமைத்து அவற்றை பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளரிடம் இப்பகுதிகளிற்கான கடற்றொழில் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது;

கடற்றொழில் அமைச்சினால் வழங்கப்பட இருக்கும் மீன்பிடி உபகரணங்கள் இப்புதியசங்கங்களின் ஊடாகவே வழங்கப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்களும் தற்பொழுது பெற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, கிராம சேவகர் பிரிவு தோறும் கடற்றொழிலாளர்கூட்டுறவுச்சங்கங்களை அமைத்து அவற்றை பதிவு செய்து மீனவர்களின் புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளில் பங்கு கொள்வதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழங்கப்படவுள்ள புனர்வாழ்வு புனரமைப்பு திட்டங்களில் மானிய திட்டங்களும் உள்ளடங்குகின்றன என அவர் மேலும் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்

# நாடக பயிற்சிவகுப்பு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக சங்கானை வட்டத்தினரால் நடாத்தப்பட்டு வரும் நாடகக் கலைஞருக்கான பயிற்சி வகுப்புகள் இன்று சனிக்கிழமை மாலை 3 மணி முதல் இரவு 8.00 மணிவரையும் நாளை ஞாயிறு காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரையும்நடைபெறும். மூளாய் அ. மி. த. க பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி பயிற்சி வகுப்புகளை கலைபண்பாட்டுக் கழக சங்கானை வட்ட இணைப்பாளர் திரு, கலையரசன் ஒழுங்கு செய்துள்ளார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-12-17**

**சனி இரவு**

08.01 - அறிவியல் கலசம்.
08.10 - நிகழ்வும் பகிர்வும்
08.25 - நேயர் கடிதங்கள்
08.30 - செய்திகள்.
08.40 - சித்திரம்-ந. கிருஸ்ணா எழுதிய ''கடற்பலம்''
09.00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994-12-18**

**ஞாயிறு காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - களத்தில் மலர்ந்தவை.
07.30 - செய்திகள்.
07.35 - பத்திரிகைச் செய்திகள்.
07.40 - களத்தில் மலர்ந்தவையின் தொடர்ச்சி.
08.00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## 950 ரூபாவுடன் நபர் தலைமறைவு

(திருநெல்வேலி)

வீட்டில் ஒருவரும் இல்லாத வேளையில் குறைந்த விலையில் சீனிபெற்றுத் தருவதாகக்கூறி பண மோசடி செய்த சம்பவம் ஒன்று மருதனார்மடம் றொட்டியாலடியில் இடம் பெற்றுள்ளது.

இப்பகுதியில் வசித்து வரும் வயோதிப மாது ஒருவரிடம் அவரது மருமகளின் பெயரைக்கூறி தான் அவரது நண்பர் எனவும் தன்னை அறிமுகப்படுத்திய ஒருவர் கிலோ 30 ரூபாய்ப்படி சீனிபெற்றுத் தருவதாகவும் கூறி 950 ரூபாவை அபகரித்துச் சென்றுள்ளார்.

மேற்படி வயோதிப மாதுவிடம் 950 ரூபா பெற்றுக் கொண்டு இன்னும் 100 ரூபா வாங்கி வையுங்கள் ஒரு நொடியில் சீனியுடன் வருகிறேன். யாரிடமும் விடயத்தைக் கூற வேண்டாம் என கூறி சென்றுள்ளார். வயோதிப மாதுவும் மேற்படி நபருக்காக காத்திருந்து இறுதியில் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தார் (24)

# பணி இழந்தோர் பிரச்சினை செயலக மட்டத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில்தொழில் இழந்தவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களிற்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் தமிழீழத்தின் உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

யாழ் மாவட்டத்திற்கு புதிதாகநியமிக்கப்பட்டுள்ள அரச அதிபர் பொன்னம்பலத்தின் தலைமையில் குடாநாட்டின் அத்தியாவசியப் பொருள் விநியோகம் தொடர்பான கூட்டம் இவ் வாரம் முற்பகுதியில் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திலும் தொழில் இழந்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அங்கவீனர்களுக்கு உபகரணங்கள் வழங்கல்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்தில் பல்வேறு காரணங்களினால் அங்கவீனமடைந்துள்ளவர்களுக்கு முச்சக்கர வண்டிகளும் சக்கரநாற்காலிகளும் மற்றும் காது கேட்கும் கருவிகளும் வடக்கு-கிழக்கு சமூகசேவைத் திணைக்களத்தினால் வழங்கப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், வேலணை, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், பருத்தித்துறை, மருதங்கேணி, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள அங்கவீனர்களுக்கே இவை வழங்கப்பட விருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் மற்றும் காது கேட்கும் கருவிகளைபெற்றுவிநியோகிக்கும் படி யாழ் சமூக சேவைத் திணைக்களத்தை வடக்கு - கிழக்குமாகாணசமூகசேவைத் திணைக்களம் கேட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (24)

## விநியோகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ப. நோ. கூ. சங்கம் தனது இடம்பெயர்ந்த பாவனையாளரிற்கு 19 புள்ளிக்கான இரண்டு வார உலர் உணவு விநியோகத்தை மேற்கொண்டு வருகிறது. (இ)

# 32 பேரைக் கடித்துக்குதறிய விசர்நாய் அடித்துக்கொலை

(வடமராட்சி)

வீதியால் சென்றோரை வீதியில் அலைந்து திரிந்த விசர்நாய் ஒன்று கடித்துத் துன்புறுத்தி முப்பத்திரண்டு பேர் ஒரே நாளில் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

இப்பரபரப்பான சம்பவம் நவிண்டில் கரவெட்டிப் பகுதிகளில் கடந்த புதன்கிழமை நடந்தது. இதுபற்றி மேலும் தெரியவருகையில் நவிண்டில் எற்றான்குளம் பகுதியில் இருந்து சம்பவதினம் விசர் நாய் ஒன்று கரவெட்டி நோக்கி வந்துகொண்டிருந்தபோது வீதியால் செல்வோரை துரத்தித் துரத்திக் கடித்ததாகவும் இதற்கு இலக்காகிப் பல்வேறு வயதினர் 32 பேர் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

காயங்களுக்கு இலக்கானோரில் சிலர் சிகிச்சை பெற்று திரும்பினர். சிலர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இந்த நாயின் செயலினால் பீதியடைந்த மக்கள் பலரும் திரண்டு விசர்நாயை அடித்துக்கொன்றனர் (யோ)

# ஆசிரியருக்கான உடற்கல்வி விளையாட்டு பயிற்சி

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையால் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களுக்கு நடத்தப்படும் உடற்கல்வி விளையாட்டுத் துறைப் பயிற்சிநெறி இன்று தொடக்கம் தொடர்ந்து 7 நாட்களுக்கு நடைபெறும் இப் பயிற்சிநெறியில் 60க்கும் மேற்பட்ட தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொள்வார்கள். இப் பயிற்சிநெறி யாழ் இந்து, யாழ். இந்து மகளிர் கல்லூரிகளில் நடைபெறவிருக்கிறது.

இக் கருத்தரங்கிற்கான ஆரம்ப வைபவம் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும்

## யாழ் வன்னி தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப்பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ். ஆரியகுளம் சந்தியிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகாமையிலும் உள்ள செயலகங்களிலும், ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கருமபீடத்திலும் செய்திகள் ஏற்கப்படுகின்றன.

1. சலுகை செய்திகள் முதல்15சொற்களுக்கும் ரூபா 15/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2/-ம் அறவிடப்படும்.

2. வழமைச் செய்திகள் முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/-ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5/- ம் அறவிடப்படும்

3. வியாபாரச் செய்திகள் முதல் 10 சொற்களுக்கு ரூபா 200/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/-ம் அறவிடப்படும்

(மேற்கூறப்பட்ட 1, 2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா 100/-ம் 3ற்கு ரூபா 200/-ம் அறவிடப்படும்)

**அவசர கட்டணம் அறவிடப்பட்டு செய்திகள் கடுகதியில் விநியோகிக்கப்படும்.**

மேலதிக விபரங்களை அந்தந்த கருமபீடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-10872)

# பெயர் மாற்றம்

அருச்சுனா சாலை யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது நிறுவனமாகிய

**விக்ரர்**

**இயந்திர உதிரிப்பொருள் வாணிபம்**

# காலத்தின் தேவை கருதி செய்ததை இந்த மண் என்றும் மறக்காது

- புதுவை இரத்தினதுரை

(யாழ்ப்பாணம்)

''காலத்தின் தேவையை அறிந்து வரலாற்றுத் தேவைகளை அறிந்து இந்த மண்ணிற்கு சேவை செய்பவர்களை இந்த மண் என்றும் மறக்காது.

அந்தக் காலம் தொட்டு இன்றுவரையான எழுத்தாளர்கள் கற்பனைத் தலைவர்களைப் பற்றியே காவியம் படைத்துள்ளார்கள். ஆனால் எமது பல்கலைக்கழக மாணவனான 'கொலின்ஸ்' அவர்கள் எம்முடன் இரத்தமும், சதையுமாக வாழ்ந்து கொண்டிருக்கும் எமது காவியத் தலைவரைப்பற்றி எழுதியுள்ளார்.''

இவ்வாறு நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் ''சுவடுகள்'', ''இதயநாதம்'' ''எங்கள் தாய்த்திரு நாடு'' என்னும் மூன்று நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த வெளியீட்டு விழாவின் பொறுப்பாளர் தொடர்ந்து பேசுகையில்,

அறியாத செய்திகளை அறிவதற்கும் அறிந்த செய்திகளை மீட்டுப் பார்ப்பதற்கும் இந்த நூல்கள் உதவுகின்றன.

எமது விடுதலை தொடர்பான பொது அறிவையும் இந்த நூல்கள் வழங்குகின்றன என்றார்.

இவ் விழாவில் உரையாற்றிய கல்விக் கழக பொறுப்பாளர் வெ. இளங்குமரன்,

தற்பொழுது உள்ள நெருக்கடியான காலத்தில் ஒரே முறையில் மூன்று நூல்கள் வெளியிடப்படுவது அரிய செயலாகும்.

இவை எமது போராட்டத்திற்கு உரம் சேர்க்கக் கூடியது. அதுமட்டுமல்ல எமது மாணவர்களிற்கு பயன்படக் கூடியது. மாணவர்களிற்கு கற்பதில் உள்ள தடைகளை நீக்க இவை உதவக்கூடியது.

தமிழீழத்தில் மாணவர்களிற்கு இலக்கியம், கலைத்திறன், விளையாட்டு போன்றவற்றில் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பாடுகள் கோட்ட, மாவட்ட மட்டங்களில் நடைபெற்றுவருகிறது.

இவற்றில் கடந்த காலத்தில் மாணவர்கள் ஆர்வப்படுவதற்கு உந்து சக்தியாக செயற்பட்ட மாவீரர்களது செயற்பாடுகளை இந்த சுவடுகள் நூல் எமக்கு மீட்டுத் தருகின்றது என தெரிவித்தார்.

இவ் விழாவில் தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை தலைவர் அருட்திரு. பிரான்சிஸ் யோசப் அடிகளார் மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (இ),(தி),(பா)

## ஒக்சிசன் சிலிண்டர்

யாழ். போதனா வைத்தியசாலைக்கு பருத்தித்துறைக்கு வந்த 'ஹபரண' கப்பலில் மருந்து வகைகள் வந்துள்ளன.

இவற்றுடன் 191 ஒக்சிசன் சிலிண்டர்களும் பெற்றோல், டீசல் என்பனவும் வந்தன. (யோ)

இதயநாதம், சுவடுகள், எங்கள் தாய்த்திருநாடு

# வி. பு. மாணவர் அமைப்பால் வெளியிடப்பட்ட 3 நூல்கள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் இதயநாதம், சுவடுகள், எங்கள் தாய்த் திருநாடு ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா நேற்று மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ந. இன்பன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முதலில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரையின் வெளியீட்டுரையை அடுத்து அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலனால் மூன்று நூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன. பேராசிரியர் குணரட்ணம், திரு. க. சண்முகநாதபிள்ளை (செயலாளர் கல்வி மேம்பாட்டு பேரவை) திரு. ஜவான் (பொறுப்பாளர் நிதர்சனம்) ஆகியவர்கள் இந்நூல்களின் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன், அருட்திரு. பிரான்சிஸ் யோசவ் அடிகளார் (தமிழீழ

தடா பெயரில் 57 பேர் கடந்த ஐந்து ஆண்டுகளாக விசாரணையின்றி சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். காயமுற்று சிகிச்சைக்கெனவந்தவர்களும் இவர்களில் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை இலங்கைத் தமிழ் அகதிகள் வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இலங்கைஅகதிகளுக்கும் அடிப்படை மனித உரிமைகள் கிடைக்கப்பெற வேண்டும். இவற்றிற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட வேண்டும்இவ்வாறு தமிழ் ஆர்வலர் சங்கத்தின் சார்பில் தமிழ் நாடு வந்துள்ள மனித உரி

கூட்டுறவுச் ...ரின்பாலைத் தெரிந்துகொண்டே விற்பனை செய்தமை விசாரணையில் புலனாகியதோடு மேலும் இது போன்ற உடைந்த பால்மா பைக்கட்டுகளை விலை குறைத்து விற்பனை செய்து வந்தமையையும் அறிந்து கொள்ள முடிந்தது. உடைந்த, பழுதடைந்த, காலாவதியான பால்மா மற்றும் உணவு வகைகளினால் தொற்று நோய்க் கிருமிகள், தொற்றுநோய்களை ஏற்படுத்தும் எனத் தாம் அறிந்துள்ளதாகவும் விசாரணையில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார சேவைப் பகுதியினருக்கு இவ் விடயம் முதற்தடவையாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபடியால், சங்க நிர்வாகிகள் எச்சரிக்கை செய்யப்பட்டதோடு இது போன்ற உணவு விநியோகச் சீர்கேடுகள் எதிர்காலத்தில் நடைபெறும் பட்சத்தில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம் என அவர்களுக்கு அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நாட்டுச் சூழ் நிலையில் பங்கீட்டு அடிப்படையில் உலர் உணவுப் பொருள்களை விநியோகிக்கும் ஏகபோக உரிமைகளைப் ப.நோ.கூ. சங்கங்கள் மேற்கொள்வதானது மிகமகத்தானதொன்றாகும். தமதுபாரம்பரியசொந்தப்பிரதேசங்களை விட்டு இடம் பெயர்ந்து, இருப்பிட வசதி, தொழில் வசதிகள் போன்றவற்றை இழந்து அகதி முகாம்களிலும், உற்றார், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்ற நிலையில் உள்ள மக்கள் யாவரும், தமது அன்றாட உணவுத் தேவைகளைப் பங்கீட்டு முறையில், மனித போசனைக்குத் தீங்கு விளைவிக்காத உணவுப் பொருள்களை நிவாரணமாகப் பெற்றுக் கொள்வதற்குப் ப.நோ.கூ. சங்கங்களை நம்பியிருக்கின்றார்கள்.

தமது உணவுத் தேவைகளுக்காகக் கூட்டுறவுச் சங்கங்களையே நம்பிவாழும் பெரும்பாலான மக்களுக்குத் தரமான பொருட்களைச் சுகாதார முறைப்படி களஞ்சியப்படுத்தி, காட்சிப்படுத்தி விநியோகம் செய்யும் பொறுப்பைச் சங்க நிர்வாகமே செய்து கொடுக்க வேண்டும் எனத் தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினர் எதிர்பார்க்கின்றார்கள்

மேலும் இந்நடவடிக்கைகள் தொடர்வதைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினரால்அவ்வப்போதுமேற்கொள்ளப்படும் திடீர்ப் பரிசோதனைகளில் தேவையேற்படும் பட்சத்தில் மாதிரிப் பொருட்களை எடுப்பதற்கும் சகல உணவுப் பொருள் நிலையத்தினரும்ஒத்துழைப்பு நல்குமாறு, தமிழீழ சுகாதார சேவைப்பொறுப்பாளர்வேண்டிக் கொள்கிறார்.

## கலைத்துறை பயிற்சி

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக வடமராட்சிக் கோட்ட செயலகத்தில் நுண் கலை சார்ந்த கவின் கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கவின் கலைக் கல்லூரியில் வயலின், மிருதங்கம், நடனம், சங்கீதம்போன்ற துறைகளில் பயிற்றுவிக்கப்படவுள்ளது. மேற்படி துறைகளில் பயில விரும்புவோர் வடமராட்சிக்கோட்ட கலை பண்பாட்டுக் கழகச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# மரண அறிவித்தல்கள்

## ஒஸ்வோல்ட் தானியேல்

(O.T. மனுவல்)

திரு. **O.T.** மனுவல் அல்லது ஒஸ்வோல்ட் தானியேல் அவர்கள் கடந்த 15-12-94-ல் இறையடி சேர்ந்துவிட்டார். அன்னார் திரு. யோன் மனுவல், மேரிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் திரு. தில்லையம்பலம், நல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் திரு. ஒஸ்வோல்ட் யோகேந்திரன் (ஜேர்மனி), நிர்மலா (பிரான்ஸ்), கௌரி (பிரான்ஸ்), இந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. சிவகுமார், சந்திரகுமார், விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் யோன் மனுவல், **A.S.** மனுவல், ஜோசப் மனுவல்,

## இயந்திர உதிரிப்பொருள் வாணிபம்

இன்றிலிருந்து

## சேரன் பல்பொறி உதிரிகள் வாணிபம்

யாழ்ப்பாணம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சேரன்** பல்பொறி உதிரிகள் வாணிபம்

அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம். (சி-10929)



இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

தினசரி 4. 30, 6.30
சனி, ஞாயிறு 10. 30, 4. 30, 6. 30

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும்

★ **எல்லைக் கற்கள்** ★

(முழு நீள வர்ணப்படம்)

தினசரி பி.ப 2.30க்கு மட்டும்

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராஜனின்

★ **பிஞ்சு மனம்** ★

(வர்ண முழுநீளப்படம்)

(சி- 10922)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம், இலக்கத்திலுள்ள ஈழநாதம்பணிமனையில்1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


ஆகியோர் மங்கள விளக்கேற்ற

## பயண ஒழுங்கு ஆராய்வு

1994 கல்வியாண்டிற்கான வவுனியா கல்விக் கல்லூரி அனுமதிக் கடிதத்தினைப் பெற்றுக் கொண்ட புதிய மாணவர்கள் கல்விக் கல்லூரிக்கான பயண ஒழுங்குகள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்காக21-12-1994 காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரிகுமாரசுவாமிமண்டபத்தில் கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### தொழில்

குறிப்பிடுகையில், இவ் அமைப்பு ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் தொடர்பாகநேற்று முன்தினம் கொழும்பு பத்திரிகைகளில் சில தவறான தகவல்கள் திரித்து வெளியிடப்பட்டுள்ளன. எனினும் தொழில் பிரச்சினைகள் காரணமாக ஏற்படும் வன்செயல்களைத் தடுப்பதற்கே இவ் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருந்தும் தொழிலாளர் வர்க்கத்தினர் தமது உரிமைகளைவென்றெடுக்க சட்டபூர்வமாகவும், ஜனநாயக அடிப்படையிலும் நடவடிக்கை மேற்கொள்ள உரிமை பெற்றிருக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எப்போது

பதில்தர அவர்களால் முடியவில்லை. இந்நிலையில் என் போன்றோரின்பிரச்சினையை தீர்க்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். விடுதலைப் புலிகள் தம்வசமுள்ள போர் கைதிகளின் விபரங்களை செஞ்சிலுவைச் சங்கமூடாக வெளியிடவேண்டும்.

சமாதானப் பேச்சு எப்போது நடக்கும் என்றும் போர்க் கைதிகள் விபரம் எப்போது கிடைக்கும் என்றும் எதிர்பார்த்துள்ளேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யோசவ் அடிகளார் (தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை தலைவர்) ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் மதிப்புரையாற்றப்பட்டது. (தி) (இ) (பா)

## வவுச்சர்கள்

(வடமராட்சி)

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களது டிசம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன. சிவில் ஓய்வூதியர்களது வவுச்சர்களே வந்துள்ளன.

### வேலை

காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலில் உதவி மருத்துவ அதிகாரிகள் (A.M.O) வேலை நிறுத்தத்தில் இறங்கியபோது அவர்களின் கோரிக்கைகளுக்கு சம்மதம் தெரிவித்தது. இதில் முக்கியமாக உதவி மருத்துவ அதிகாரிகளின் தரத்தை பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற அதிகாரிகளின் தரத்திற்கு உயர்த்துவதாக உறுதியளித்தது.

ஆனால் அதை எதிர்த்து பல்கலைக்கழக பட்டம் பெற்ற வைத்திய அதிகாரிகள் வேலை நிறுத்தம்செய்தபோது, உதவி மருத்துவ அதிகாரிகளுக்கும், பட்டம்பெற்ற வைத்திய அதிகாரிகளுக்கும் இடையில் உள்ள பதவிநிலை வித்தியாசம் பேணப்படும் என உறுதியளித்துள்ளது. அரசாங்கத்தின் இம் முன்னுக்குப் பின் முரணான செயற்பாடு அதன் அனுபவமற்ற தன்மையையும், தெளிவான கொள்கை இன்மையையும் காட்டுவதாகவுள்ளது.

இதே சமயம் இவ்வாறு நடைபெறும் வேலை நிறுத்தங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும், நிறுவனங்களில், பொறுப்புகளில் உள்ள அவர்களின் ஆதரவாளருமே காரணம் என அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

நாடு வந்துள்ள மனித உரிமைகள் குழுவிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. தமிழ் ஆர்வலர் சங்கத்தின் சார்பில் டாக்டர் சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன் மற்றும் கவிஞர்வா.மு. சேதுராமன் போன்றோர் அளித்த மனுவிலேயே இக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மேலும் தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களுக்கும் விஜயம் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளது. இந்திய - இலங்கை நட்புறவு சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் ரி.என். கோபாலன் வலியுறுத்தியதை தொடர்ந்து இக் குழுவினர் வேலூர்முகாமிற்கு கடந்த செவ்வாயன்று சென்றுள்ளனர்.

### தமிழகத்தில்

லில் பல மரணங்கள் ஏற்பட்டதென்றும், வனத்துறை அதிகாரிகளின் காவலில் இருந்த 9 பேர் மரணமாகினர் என்றும் பொலிஸ் காவலில் பெண்களிடம் கொடுமை இழைக்கப்பட்டதாக தம்மிடம் புகார்வந்துள்ளதாகவும் மிஸ்ரா தெரிவித்தார். தமிழகத்தில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து கமிசன் ஆராயும் என்றார் அவர்.

மாநில மனித உரிமை கமிஷன் விரைவில் அமைக்கப்படும் என்றும் நீதிபதி மிஸ்ரா தெரிவித்தார்.

### அக்காவுடனான

ரணைகளை மேற்கொண்ட பின்னர் இறந்தவரின் சடலத்தை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளனர். (யோ)

யோன் மனுவல், **A. S.** மனுவல், ஜோசப் மனுவல், **V.L.**மனுவல், **J.T.**மனுவல், அஞ்சலீனா, ஜெயராணி, பற்றீசியா, குலநாயகி ஆகியோரின் அன்பு சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் 17-12-94 சனி (இன்று) காலை 10 மணியளவில் சண்டிலிப்பாய் பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி சேவியர் அஞ்சலீனா
(சகோதரி)

(10423)

## திருமதி செல்லையா சின்னத்தங்கம்

(நெல்லியான் சுழிபுரம்)

திருமதி செல்லையா சின்னத்தங்கம் (16-12-94) நேற்று காலமானார். இவர் செல்லையாவின் அன்பு மனைவியும் திருமதி நாகரத்தினம் நடன சண்முகம் (பறளாய் மேற்கு)திருமதி இராசையா செல்வரட்ணம், **M. S.** இராசரத்தினம், **M. S.** விஜயரத்தினம், பாலரத்தினம், சந்தணகுமார் (பிரான்ஸ்), சிவகுமார் (ஆசிரியர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஐயாத்துரை இராசையாவின் அன்பு மாமியாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

ஐ. இராசையா
(மருமகன்)

மடத்தடி லேன்,
மானிப்பாய்.

(10427)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் (வர்த்தகத்துறை) **S.K.** பிரபாகரன் (உடுவில்) அவர்களின்தாயார்

**திருமதி . கு. பொன்னம்மா**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். (இவரது ஈமக்கிரியைகள் இன்று மாலை 2-00 மணிக்கு இடம்பெறும்.)

**யாழ். பல்கலைக்கழக இறுதிவருட வர்த்தக முகாமைத்துவ நண்பர்கள்**

(10428)